# உதயன்

பக்கங்கள் - 20 விலை - 30 ரூபா செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் : 35 கதிர் : 324 ஐப்பசி 4 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை 20 ஒக்ரோபர் 2020 வள்ளுவர் ஆண்டு 2051


## நேற்றும் 87 பேர்

கொழும்பு, ஒக்.20
இலங்கையில் நேற்று 87 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டு 16 ➤

# 20 இன் கதியை தீர்மானிக்க கூடுகின்றது நாடாளுமன்று



- 23 ஆம் திகதி வாக்கெடுப்பு
- 5 கட்சிகள் எதிர்ப்பு
- 5 கட்சிகள் ஆதரவு
- 2 கட்சிகள் நடுநிலை

கொழும்பு, ஒக்ரோபர் 20

நாடாளுமன்றம் இன்று முற்பகல் 10 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடவுள்ளது. சபாநாயகர் அறிவிப்பு வேளையின்போது, அரசமைப்பின் 20ஆவது திருத்தம் தொடர்பான உயர்நீதிமன்றத்தின் சட்டவியாக்கியானத்தை சபாநாயகர் சபைக்கு அறிவிப்பார். 18 ➤

## வவுனியா, கிளிநொச்சியில் பி.சி.ஆர். ஆய்வுகூடங்கள்!

### விரைவில் அமைக்குமாறு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 20
கொழும்பு அரசின் நேரடிக் கட்டுப்பாட்டிலுள்ள யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் மாத்திரம் பி.சி.ஆர். பரிசோதனை ஆய்வுகூடம் உள்ள நிலையில், வடக்கு மாகாண நிர்வாகத்தின் ஆளுகைக்கு உட்பட்ட 18 ➤

முச்சந்தி முரளி



"நல்லகாலம் வருசம் முழுக்க தேடாமல் இப்பாவது ஆளைக் கண்டுபிடிச்சிட்டினமே. என்னவொரு வேகம் பாருங்கோ"

## பி.சி.ஆர். சோதனைகள் பல்கலையில் நிறுத்தம்

யாழ்ப்பாணம், ஒக். 20
யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தில் முன்னெடுக்கப்பட்டு வந்த பி.சி.ஆர். சோதனைகள் கடந்த 2 மாதங்களாக நிறுத்தப்பட்டுள்ளன. கொழும்பு சுகா 18 ➤

## அதிகாலையில் ரிஷாத்தை வளைத்துப் பிடித்தது சி.ஐ.டி.

### 27 வரை விளக்கமறியல்



கொழும்பு, ஒக்.20
குற்றப் புலனாய்வுப் பிரிவால் நேற்றுக் கைதுசெய்யப்பட்ட முன்னாள் அமைச்சரும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட நாடா 18 ➤

## ரிஷாத்துக்கு அடைக்கலம்: 7 பேருக்கு விளக்கமறியல்

கொழும்பு, ஒக்.20
தெஹிவளை, எபனேசர் மாவத்தையிலுள்ள மாடிக் குடியிருப்பில் முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் நேற்று அதிகாலை கைது 18 ➤

## பருத்தித்துறை நடத்துநர் இரணவிலவுக்கு மாற்றம்

யாழ்ப்பாணம், ஒக்.20
கொரோனாத் தொற்றுடன் இனங்காணப்பட்ட இலங்கை போக்குவரத்துச் சபை பஸ் நடத்துநர் சிகிச்சைக்காக சிலாபம், இரணவில கொவிட்-19 சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பப்பட்டுள்ளார். 16 ➤



## ஊடகவியலாளர் நிமலராஜனின் 20ஆவது ஆண்டு நினைவேந்தல்

யாழ்ப்பாணம், ஒக்.20
படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் நிமலராஜனின் 20ஆவது ஆண்டு நினைவுதினம் நேற்றுக் கடைப்பிடிக்கப்பட்டது. 15 ➤

## கலைப்பீட மாணவர் மோதல்: விசாரணை நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக். 20
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கடந்த 8ஆம் திகதி வியாழக்கிழமை இடம் 19 ➤

## யாழ்ப்பாண நிலைமை அச்சப்படும்படி இல்லை

### மாவட்டச் செயலர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஒக்.20
யாழ்ப்பாணத்தில் தற்போது கொரோனா நிலைமை அச்சப்படும்படி இல்லை. எனினும் பொதுமக்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுவது அவசியம். இவ்வாறு தெரிவித்துள்ளார் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் 16 ➤

## வவு. கோரக் கொலை: மூன்றாமவரும் சாவு!

வவுனியா, ஒக்.20
வவுனியா ஓமந்தை பொலிஸ்பிரிவுக்குட்பட்ட மாணிக்கர் வளவுப்பகுதியில் கடந்த 17ஆம் திகதி 18 ➤

## ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று சிறுவர்கள் நீரில் மூழ்கிச் சாவு

கொழும்பு, ஒக்.20
கலேவல ரன்வெதியாவ பகுதியில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று சிறுவர்கள் 19 ➤


செலான் வங்கியிடமிருந்து
உங்கள் தங்கப் பவுனின் கரட் எதுவாயினும் அதிகூடிய முற்பணம்

அதிகபட்ச முற்பணத் தொகை
ரூ.68,000/-
0.79% மாதாந்த வட்டி வீதம் மட்டுமே

- அதிகபட்ச இரகசியத் தன்மை
- சிநேகபூர்வமான உடனடி சேவை
- சிறந்த பாதுகாப்பு

இச்சலுகை வரையறுக்கப்பட்ட காலத்திற்கு மட்டுமே

மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியை நாடுங்கள் அல்லது

தங்கக் கடன் 011 200 88 88 செலான் வங்கி

Brand Finance Rating "A+" Fitch Rating: "A" (lka)

# இந்தியா வழங்கும் நிதியின் நலன் ஈழத்தில் தாக்கம் செலுத்தக்கூடாது

## மஹிந்தவிடம் மோடி ஒப்பந்தம் பெறவேண்டுமென கடிதம் அனுப்பினார் விக்னேஸ்வரன் எம்.பி.

**யாழ்ப்பாணம், ஒக். 20**

**இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி இலங்கை அரசுக்கு வழங்கிய நிதியின் நலன்களை, இலங்கை அரசு வடக்கு கிழக்கு தமிழரின் தாயகப் பிரதேசத்தில் பாவிக்கக்கூடாது என்றும், இருதரப்பு ஆயுதமேந்திய படைகளின் கூட்டை வலுப்படுத்த வழங்கப்படும் உதவிகள் மற்றும் பயிற்சிகள் இலங்கையின் தமிழ் மக்களுக்கு எதிராகப் பாவிக்கப்பட மாட்டாது என்ற உத்தரவாதத்தையும் இலங்கைப் பிரதமரிடமிருந்து இந்தியப் பிரதமர் பெற்றுக் கொள்ளவேண்டும்.**

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் கோரியுள்ளார்.

இது பற்றிய கடிதத்தை அவர் இந்தியப் பிரதமர் மோடிக்கு அனுப்பியுள்ளார். அண்மையில் இந்தியாவின் கொடையாகக் கொடுக்க உடன்பட்ட தொகையான 15 மில்லியன் டொலர் தொகையை இரு நாடுகளுக்கிடையிலான பௌத்த நட்புறவை மேம்படுத்தவும் பௌத்த சமய வணக்க ஸ்தலங்களைக் கட்டுவதற்கும் புதுப்பிப்பதற்கும் மற்றும் தொல்பொருளியல் சம்பந்தமான கூட்டுநடவடிக்கைகளை எடுப்பதற்கும் வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், விக்னேஸ்வரன் மேற்கண்டவாறு கோரியுள்ளார். (த)

# எம்.பிக்களுக்கு 'கௌரவ' தேவையில்லை

## கூறுகின்றார் ஹரின் பண்டார

கொழும்பு, ஒக். 20

நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் மக்கள் பிரதிநிதிகளை ஏன் கௌரவ உறுப்பினர்கள் என்று அழைக்கின்றனர் என்று கேள்வியெழுப்பிய ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ, கௌரவ உறுப்பினர்கள் என அழைப்பது கேள்விக்குரியது என்றும் தெரிவித்தார்.

ஊதியம் மற்றும் சிறப்புரிமைகளைப் பெறாது சுய விருப்பத்தின் பேரில் கடமையாற்றும் நபர்களையே 'கௌரவ' என்ற அடைமொழியைக் கூறி அழைப்பார்கள்.

ஊதியம் மற்றும் சிறப்புரிமைகளைப் பெறும் மக்களின் பணத்தில் பராமரிக்கப்படும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு 'கௌரவ' என்ற வார்த்தையைப் பயன்படுத்துவதை விரும்பவில்லை எனவும் ஹரின் பெர்னாண்டோ குறிப்பிட்டுள்ளார். (த-இ)

# ஒன்றரை லட்சம் பேர் தொற்றாளர்களாக இருப்பர்

## அரசு அசண்டையீனம் என்கிறார் நளின்

கொழும்பு, ஒக். 20

மினுவாங்கொட ஆடைத் தொழிற்சாலையுடன் தொடர்புடைய தொற்றாளர்கள் சுமார் ஒன்றரை இலட்சம் பேர் சமூகத்தில் காணப்படலாம்.

எனவே அரசு தொற்றாளர்களை இனங்காண்பதற்காக மேற்கொள்ளப்படுகின்ற பி.சி.ஆர். பரிசோதனைகளில் சந்தேகம் ஏற்பட்டுள்ளது என நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமை அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

குருநாகல் மாவட்டத்தின் குளியாபிட்டிய மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த பெண்ணொருவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டதையடுத்து 12 மருத்துவர்கள் உள்ளிட்ட 43 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். அந்த மருத்துவமனைக்கு அண்மையில் நானும் சென்றிருந்தேன். எனினும், தனிமைப்படுத்தப்பட்டுள்ள 12 மருத்துவர்கள் மற்றும் தாதியர்களுக்கு அங்கு போதுமான வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை. அரசு அசமந்தப் போக்குடன் செயற்படுகிறது. சுகாதார அமைச்சரிடம் இவை பற்றிக் கேட்டால் அவர் பதில் கூற முடியாமல் தடுமாறுகின்றார். சபாநாயகர் சபையை ஒத்தி வைக்கின்றார். பி.சி.ஆர்.' பரிசோதனை குறித்து அரசுக்குள்ளேயே இவ்வாறான நிலைமை என்றால், பொதுமக்கள் மத்தியில் எந்த நிலையில் இருக்கும் ?

மினுவாங்கொட ஆடைத் தொழிற்சாலையில் சுமார் ஆயிரத்து 500 பேர் தொற்றுக்கு உள்ளாகியிருந்தால் அவர்கள் ஒவ்வொருவரும் 10 பேருடனாவது தொடர்புகளைப் பேணியிருப்பார்களாயின் 15 ஆயிரம் தொற்றாளர்கள் சமூகத்தில் இருப்பார்கள். அந்த 15 ஆயிரம் பேரில் ஒவ்வொருவரும் தலா 10 பேருடன் தொடர்பைப் பேணியிருந்தால் சமூகத்தில் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் தொற்றாளர்களேனும் இருக்கக்கூடும். எனவே பி.சி.ஆர். பரிசோதனைகளை முறையாக முன்னெடுத்து உண்மையை வெளிப்படுத்த வேண்டும் என்று அரசிடம் கோருகின்றோம். என்றார். (த-இ)

## வடமராட்சி கிழக்கில் படகு, இயந்திரங்களுக்கு தீ வைத்த விசமிகள்

யாழ்ப்பாணம், ஒக். 20

வடமராட்சி கிழக்கு, செம்பியன்பற்று தனிப்பனை கிராமத்தில் கடற்றொழிலாளர் ஒருவரின் படகு, வெளியிணைப்பு இயந்திரம் மற்றும் பெறுமதியான வலைகள் விஷமிகளால் தீயிட்டு எரிக்கப்பட்டு உள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனிப்பனை கிராமத்தில் நேற்று முன்தினம் இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. குறித்த கிராமத்தைச் சேர்ந்த தர்மபிரகாசம் உதயதாஸ் என்பவரின் படகே இவ்வாறு விசமிகளினால் தீயிட்டு எரிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் அவர் பளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்துள்ளார். அத்துடன் யாழ். மாவட்ட நீரியல் வளத்துறைத் திணைக்கள அதிகாரிகளுக்கும் தகவல் வழங்கியுள்ளார். பொலிஸார் மற்றும் அதிகாரிகள் சம்பவ இடத்தில் விசாரணை நடத்தினர். (த-20)

## நுவரெலியாவிலிருந்து செல்கிறது இராமர் கோவிலுக்கான அடிக்கல்



இந்தியாவில் அயோத்தியில் அமைக்கப்படும் ஸ்ரீராமர் கோவிலுக்கான அடிக்கல் ஒன்று இலங்கையிலிருந்து பூஜிக்கப்பட்டு அனுப்பி வைக்கப்படவுள்ளது.

இந்தக் கல் இலங்கையின் மலைப் பிரதேசமான நுவரெலியாவில் உள்ள சீதாஎலிய சீதையம்மன் கோவிலின் புனர்நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் கண்டெடுக்கப்பட்டு இது வரை பூஜிக்கப்பட்ட ஒன்று எனத் தெரிவிக்கப்பட்டது.

இராமாயணத்தில் போற்றப்படும் இலங்கையின் கோவிலாகவே நுவரெலியா சீத்தாஎலிய சீதையம்மன் ஆலயம் வர்ணிக்கப்படுகிறது.

அந்த ஆலயம் புனர்நிர்மாணம் செய்யப்படும்போது குறித்த கல் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளதுடன் பின்பு இது வரை காலமும் அந்த கல் பூஜிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் அயோத்தியில் கட்டப்படும் ஸ்ரீ இராமபிராணின் கோயிலுக்கான அடிக்கற்களில் ஒன்றாக இதனை பயன்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த கல் சீதாஎலிய சிதையம்மன் ஆலயத்திலும் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்திலும் பூஜையிலே வைக்கப்பட்டு பரிபாலன சபையின் மூலமாக கொழும்புக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதோடு, கொழும்பிலிருந்து இந்தியாவுக்கு அனுப்ப ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (த)

# ஓமல்பே தேரரும் 20க்கு எதிர்ப்பு

## கோத்தாபயவுக்கு காட்டமான கடிதம்

கொழும்பு, ஒக். 20

அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்ட வரைவுக்கு எதிராக விலங்குகள் மற்றும் இயற்கைக்கான நீதி அமைப்பின் தலைவர் ஓமல்பே சோபித தேரரும் போர்க் கொடி தூக்கியுள்ளார்.

இது தொடர்பில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு அவர் காட்டமான கடிதம் ஒன்றையும் அனுப்பிவைத்துள்ளார்.

20ஆவது திருத்தம் நாட்டில் ஜனநாயகத்தைக் கேள்விக்குரிய நிலைக்குள்ளாக்கும் என்று அந்தக் கடிதத்தில் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குறித்த திருத்தச் சட்ட வரைவு அரசை சிவில் சமூகத்தின் மத்தியில் பெருமளவுக்கு ஆதரவு இழக்கச் செய்யும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

"ஜனாதிபதி தன்மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கையை புத்திசாலித்தனமாகப் பயன்படுத்த வேண்டும். 20ஆவது திருத்தம் குறித்த மக்களின் கரிசனைகளைக் கருத்தில் எடுக்கவேண்டும். இலங்கையின் ஜனநாயகத்தின் தலைவர் என்ற அடிப்படையில் ஜனாதிப்தி இந்தக் கருத்துக்களுக்கு விசேட கவனம் செலுத்த வேண்டும்" எனவும் ஓமல்பே சோபித தேரர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (த-22)

# 2 ஆம் அலை வந்தது எப்படி திணறுகிறது இலங்கை அரசு

கொழும்பு, ஒக். 20

அரசின் கவனவீனமான செயற்பாடுகளே கொரோனா வைரஸ் பரவலின் இரண்டாம் அலைக்குக் காரணம் என்று குற்றஞ்சாட்டியிருக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித்தலைவர் ருவான் விஜேவர்தன, வைரஸ் பரவலின் இரண்டாம் அலை எவ்வாறு ஆரம்பமானது என்பது பற்றிய உண்மையான தகவல்களை வழங்கமுடியாத நிலையில் அரசு இருக்கிறது என்றும் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

கொரோனா வைரஸ் தொற்றுநோயால் பாதிக்கப்பட்ட நோயாளர்கள் விரைவில் குணமடைவதற்குப் பிரார்த்திக்கும் நோக்கில் ஐக்கிய தேசியக் கட்சி கொழும்பு ஹுணுப்பிட்டிய கங்காராம விகாரையில் நேற்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பௌத்த வழிபாட்டு நிகழ்வின் பின்னர், ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக நாட்டின் சில பகுதிகள் முடக்கப்பட்டிருக்கின்றன. என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (த-இ)

# போக்குவரத்துத்துறையின் அன்றாட வருமானம் குறைவடைந்துள்ளது

## இலங்கை போக்குவரத்துத்துறையின் பிரதிப் பொது முகாமையாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.20

கொரோனாத் தொற்றால் இலங்கையில் ரயில் மற்றும் பஸ்களில் பயணிப்பவர்களின் எண்ணிக்கை வெகுவாக குறைவடைந்துள்ளதால் இலங்கை போக்குவரத்துத் துறையின் அன்றாட வருமானம் 80 மில்லியனிலிருந்து 44 மில்லியனாக குறைவடைந்துள்ளது என்று இலங்கை போக்குவரத்துத் துறையின் பிரதிப் பொது முகாமையாளர் ஏ.எச்.பண்டுக தெரிவித்தார்.

இந்த மாதம் 7 ஆம் திகதி தொடக்கம் நேற்றுமுன்தினம் வரை இலங்கை போக்குவரத்துச் சபைக்கு 210 மில்லியன் நட்டம் ஏற்பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இதற்கமைய, ரயில்வே திணைக்களத்தின் அன்றாட வருமானம் 19 மில்லியனிலிருந்து 14 மில்லியனாக குறைவடைந்துள்ளது என்று ரயில்வே பொது முகாமையாளர் டிலந்த பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

பயணிகளின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்துள்ளமையால், தூர இடங்களுக்கான ரயில் சேவைகளை இரத்துச்செய்ய நேர்ந்துள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம

# 28 தமிழ் எம்.பிக்களில் 20 பேர் '20'க்கு போர்க்கொடி

கொழும்பு, ஒக்.20

நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் 28 தமிழ் எம்.பிக்களில் 20 பேர் அரசமைப்பின் 20ஆவது திருத்தத்துக்கு எதிராகவும், 8 பேர் ஆதரவாகவும் வாக்களிக்கவுள்ளனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் முற்போக்கு கூட்டணி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி ஆகிய கட்சிகளின் உறுப்பினர்களும், ஐக்கிய மக்கள் சக்தியின் தமிழ் எம்.பி வடிவேல் சுரேஷும் எதிராக வாக்களிக்கவுள்ளனர்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஈ.பி.டி.பி., தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் ஆகிய கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களிக்கவுள்ளனர். சுதந்திரக்கட்சியில் அங்கம் வகிக்கும் தமிழ் உறுப்பினரான அங்கஜன், மொட்டுக் கட்சியில் உள்ள வியாழேந்திரன், தேசியப்பட்டியல் எம்.பி., சுரேன் ராகவன் ஆகியோரும் 20க்குச் சார்பாக வாக்களிக்கவுள்ளனர்.

9ஆவது நாடாளுமன்றத்தில் பொதுத்தேர்தலில் மக்களின் அங்கீகாரத்துடன் 25 உறுப்பினர்கள் நாடாளுமன்றத்துக்கு தெரிவாகினர். தேசியப்பட்டியல் ஊடாகவும் மூவருக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. அரசியல் கட்சிகளில் அங்கம் வகிக்கும் தமிழ் எம்.பிக்களின் எண்ணிக்கை வருமாறு,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 10
தமிழ் முற்போக்கு கூட்டணி 6
தமிழ் தேசிய மக்கள் முன்னணி 2
ஈ.பி.டி.பி. 2
தமிழ் மக்கள் தேசிய முன்னணி 1
தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி 1
சுதந்திரக்கட்சி 1
ஐக்கிய மக்கள் சக்தி 1
பொதுஜன பெரமுன 4

அதேவேளை, 8ஆவது நாடாளுமன்றத்திலும் 28 தமிழ் எம்.பிக்கள் அங்கம் வகித்தனர், அவர்கள் அனைவரும் 19ஆவது திருத்தச்சட்ட வரைபுக்கு ஆதரவாக வாக்களித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-44)

# வாள்வெட்டு சந்தேகநபர் கச்சாயில் கைது

சாவகச்சேரி, ஒக். 20

சாவகச்சேரி கச்சாய் பகுதியில் உள்ள வீடொன்றில் வைத்து வாள்வெட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர் என்ற குற்றச்சாட்டில் இளைஞன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். அவரிடமிருந்து கைக்குண்டு ஒன்றும் மீட்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

சாவகச்சேரி கச்சாய் பகுதியில் வாள்வெட்டு சம்பவங்களுடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர் ஒருவர் பதுங்கியிருப்பதாக பொலிஸாருக்கு நேற்று இரகசியத் தகவல் கிடைத்தது. இதையடுத்து அடையாளம் காணப்பட்ட வீட்டைச் சுற்றிவளைத்து சந்தேகநபர்கள் தேடுதலில் ஈடுபட்டனர்.

இதன்போதே 31 வயதுடைய மேற்படி சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார். கைதுசெய்யப்பட்டவரிடம் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

அவர் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு எதிர்வரும் 28ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (ம-20)



# சிறுவர்கள் சேகரித்த பிளாஸ்ரிக் கழிவுகள்

சாவகச்சேரி,ஒக்.20

தென்மராட்சி சிறுவர்கள் இருவரால் சேகரிக்கப்பட்ட பிளாஸ்ரிக் கழிவுகள், சாவகச்சேரி நகர சபை பிளாஸ்ரிக் மீளுருவாக்கல் நிலையத்தில் நேற்று ஒப்படைக்கப்பட்டன. சாவகச்சேரி நகரசபையால், உக்காத கழிவுப் பொருள்களை சேகரித்து மீள்சுழற்சி முறையில் மீளுருவாக்கம் செய்யும் நிலையம் அண்மையில் திறக்கப்பட்டது.

அங்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரி தரம் 6 மாணவன் ந.அபர்னன், சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி தரம் 5 மாணவன் அ.கரிஷ்யதுர்சன் ஆகியோர் இணைந்து கழிவுப் பொருள்களை ஒப்படைத்தனர்.

தமது வீட்டுச் சுற்றாடலிலும், கிராமத்திலும் சேகரித்த ஒரு தொகுதி பொலித்தீன், பிளாஸ்ரிக் கழிவுகளை, நகர சபை பொதுசுகாதார பரிசோதகர் பி.தளிர்றாஜிடம் கையளித்தனர். தம்மைப் போன்று ஏனைய சிறுவர்களும் தமது வீட்டுச் சுற்றாடலில், கிராமத்தில் உள்ள கழிவுகளைச் சேகரித்து இங்கு கையளிக்கலாம் என்று சிறுவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை இந்த கழிவு சேகரிப்பு நிலையத்தில் கழிவுகளைக் கையளித்து, அங்கு வழங்கப்படும் கழிவு சேகரிப்பு கூப்பன்களை நிரப்பி ஊக்கத் தொகையைப் பெறமுடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (க-இ)

# உரமானியம் வழங்கலில் சுகாதார விதிமுறை மீறல்

கிளிநொச்சி,ஒக்.20

முகக்கவசம், தனிநபர் இடைவெளி என்பன மறந்து விவசாயிகள் உரமானிம் பெறுவதற்கு முண்டியடித்தனர்.

கிளிநொச்சி பொக்கணை கமநல அபிவிருத்தி நிலையத்தில் இதனை அவதானிக்க முடிந்தது.

அங்கு பணிபுரியும் அரச உத்தியோகத்தர்களும் சுகாதார நடைமுறைகளை மறந்து மக்களை ஒன்று திரட்டியிருந்தனர்.

தற்போது கொரோனா சமூகத் தொற்றாக மாறி வரும் நிலையில், விவசாயிகள் சுகாதார நடைமுறைகளை மீறியமை மக்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. (க-113)



# ஹன்டர் மோதியதில் மாணவிக்கு படுகாயம்

கொடிகாமம், ஒக். 20

க.பொ.த உயர்தர கணித பாடத்துக்குத் தோற்றிவிட்டு வீட்டுக்குச் செல்வதற்காக பாடசாலைக்கு முன்னால் உள்ள பாதசாரிக் கடவையைக் கடந்து செல்லும் போது ஹன்டர் மோதி மாணவியொருவர் படுகாயமடைந்தார். மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரிக்கு முன்பாக நேற்று நண்பகல் இந்தத் துயரச் சம்பவம் இடம்பெற்றது. அல்லாரை வடக்கு மீசாலையைச் சேர்ந்த துரைசிங்கம் ருக்சியா (வயது 19) என்ற மாணவியே தலையில் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். (ம-159,9)

# துப்பாக்கிச் சூடு: இருவர் காயம்

கொழும்பு,ஒக்.20

காலி எல்பிட்டிய பிரதேசத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில், இருவர் காயமடைந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளன.

மது அருந்திக்கொண்டிருந்த நான்கு நபர்களிடையே ஏற்பட்ட தகராறில் ஒருவர் சுடப்பட்டுள்ளார். அதேவேளை காயமடைந்த நபர் கூர்மையான ஆயுதத்தால் துப்பாக்கிதாரியைத் தாக்கிக் காயப்படுத்தியுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் காயமடைந்த இருவரும் கராப்பிட்டி போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (க)


# பொருளாதார நிலைமையை மூடிமறைக்கிறதா அரசு?

**கொழும்பு, ஒக். 20**
**இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தி தொடர்பான சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி ஆகியவற்றின் பாதகமான எதிர்வுகூறல்களுக்கு மத்தியில் இலங்கையின் புள்ளிவிவரவியல் திணைக்களம் முக்கியமான அறிக்கையை தாமதித்துள்ளது.**

இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தி தொடர்பான ஏப்ரல் மாதம் முதல் ஜூன் மாதம் வரையான தவணைக்கான அறிக்கையை கடந்த மாதம் (செப்ரெம்பர்) 16ஆம் திகதி இலங்கை வெளியிடவேண்டும். புள்ளிவிவரவியல் திணைக்களம் இவ்வாண்டு இறுதிவரை அதனை தாமதித்துள்ளது.
இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 4.6 சதவீதத்தால் வீழ்ச்சியடையும் என்று சர்வதேச நாணய நிதியம் எதிர்வுகூறியிருந்த அதே வேளை 6.7 சதவீதத்தால் வீழ்ச்சியடையும் என்று உலக வங்கி சுட்டிக்காட்டியிருந்தது.
ஆசியப் பிராந்தியத்தில் மொத்த உள்நாட்டு உற்பத்தி தொடர்பாக அறிக்கைகளை இன்னமும் வெளியிடாத ஒரு சில நாடுகளில் இலங்கையும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது.
சர்வதேச நாணயநிதியம் மற்றும் உலக வங்கியின் எதிர்வுகூறல்களுக்கு மத்தியிலும் 2020 நிறைவில் இலங்கை சாதகமான பொருளாதார வளர்ச்சியை காண்பிக்கும் என்று நிதி மூலதன சந்தைகள் மற்றும் அரச தொழில் முயற்சியாண்மைக்கு பொறுப்பான இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்திருந்தமை சுட்டிக்காட்டத்தக்கது. (ஒ-இ)

## பிள்ளையான் மீதான வழக்கு ஒத்திவைப்பு

கொழும்பு,ஒக்.20
கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழ் மக்கள் விடுதலைப்புலி கள் கட்சியின் தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) மீதான வழக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.
கொரோனா வைரஸ் தொற்று அச்சம் காரணமாக, சட்டமா அதிபர் திணைக்களச் சட்டத்தரணிகள் சமூகம் அளிக்காத காரணத்தால் வழக்கு எதிர்வரும் நவம்பர் மாதம் விசாரணைக்காக ஒத்திவைக்கப்பட்டுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை வழக்கில் கைதுசெய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பிள்ளையான் மீதான வழக்கு விசாரணை நேற்று இடம்பெற்றது. பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் நேற்று நீதிமன்றுக்கு பிள்ளையான் உட்பட ஆறு பேரும் அழைத்துவரப்பட்டனர். வழக்கு மேல் நீதிமன்ற நீதிபதி டி.சூசைதாசன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. எதிர்வரும் நவம்பர் 2 ஆம், 10 ஆம் மற்றும் 16 ஆம் திகதி வரை வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம், 2005 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 25ஆம் திகதி மட்டக்களப்பு புனித மரியாள் தேவாலயத்தில் வைத்து படுகொலை செய்யப்பட்டார்.
சம்பவம் தொடர்பாக, கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் பிரதீப் மாஸ்டர் என அழைக்கப்படும் எட்வின் சில்வா கிருஷ்ணானந்தராஜா, கஜன் மாமா எனப்படும் கனகநாயகம் மற்றும் இராணுவப்புலனாய்வு உத்தியோகத்தர் எம்.கலீல், முன்னாள் இராணுவச் சிப்பாயான மதுசிங்க (வினோத்) ஆகியோர் சந்தேகத்தின் பேரில் கடந்த 2015ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (க-இ)



மானிப்பாய் பரிஷ் லியோ கழகம் , தாய் கழகமாகிய மானிப்பாய் பரிஷ் லயன்ஸ் கழகத்துடன் இணைந்து, வலி. தென் மேற்கு பிரதேச சபை பிரிவுக்கு உட்பட்ட பிரதேசங்களில் கொரோனா வுக்கு எதிரான விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொண்டனர். (க-இ)

## சீனப் பிரஜைகள் ஐவர் கைது

கொழும்பு,ஒக்.20
கொள்ளுப்பிட்டியில் அமைந்துள்ள அடுக்குமாடிக் குடியிருப்பு வளாகத்தில், சீனப்பிரஜைகள் ஐவர் நேற்று கைதுசெய்யப்பட்டுள்ளனர்.
சூதாட்டத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இவர்கள் கைதுசெய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். கைதுசெய்யப்பட்டவர்களை, நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (க-இ)

## குடிவரவு திணைக்களம் மீண்டும் திறப்பு

கொழும்பு,ஒக்.20
குடிவரவு - குடியகல்வுத் திணைக்களத்தின் தலைமையகம் மீண்டும் பொதுமக்கள் பயன்பாட்டுக்கு நேற்று திறக்கப்பட்டுள்ளது. கொரோனாத் தொற்றுபரவலை அடுத்து, அண்மையில் தற்காலிகமாக அலுவலகம் மூடப்பட்டது.
இந்த நிலையில், முற்கூட்டியே தொலைபேசி அழைப்பு மூலம் நேர மொன்றை ஒதுக்கி, அங்கு வருமாறு திணைக்களத்தால் அறிக்கை வெளியிடப்பட்டது.
அத்துடன், சுகாதார அறிவுறுத்தல்களை பின்பற்றுமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (க-இ)

## மனிதனின் தோலில் 9 மணித்தியாலங்கள் உயிர்வாழும் கொரோனா

கொழும்பு,ஒக்20
புதிய கொரோனா வைரஸ் மனிதத் தோலின் மேற்பரப்பில், சுமார் ஒன்பது மணித்தியாலம் உயிர்வாழ முடியும். இது இன்ஃப்ளூவன்ஸா ஏ வைரஸ் மனிதனின் மேற்பரப்பில் தங்கியிருக்கும் காலத்தை விட, ஐந்து மடங்கு காலம் அதிகம் என்று ஜப்பானில் ஆராய்ச்சியாளர்கள் குழு கண்டறிந்துள்ளது.



கியோட்டோ ப்ரிபெக்சுரல் மருத்துவ பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சியாளரான தொற்று நோயியல் நிபுணர் ரியோஹெய் ஹிரோஸ் உள்ளிட்ட ஆராய்ச்சியாளர்கள் இதனைக் கண்டுபிடித்துள்ளனர். இந்த நிலையில் புதிய கொரோனா வைரஸ் மதுசாரம் அடிப்படையிலான கிருமிநாசினி அல்லது அதே செறிவின் எதனோல் திரவத்தால், 15 விநாடிகளுக்குள் செயலிழக்கப்படுவதை ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
இதனையடுத்து மக்கள் தங்கள் கைகளை மதுசாரம் கலந்த தொற்று நீக்கிகளைப் பயன்படுத்தி நன்கு கழுவ வேண்டும் அல்லது மதுசாரம் சார்ந்த கிருமிநாசினியைப் பயன்படுத்த வேண்டும் என்று ஆராய்ச்சியாளர் ஹிரோஸ் தெரிவித்துள்ளார்.
குழுவின் இந்தக் கண்டுபிடிப்புகள் அமெரிக்காவின் அறிவியல் இதழான 'மருத்துவத் தொற்று நோய்கள்' என்ற இணையப் பதிப்பில் வெளியிடப்பட்டுள்ளன.
குழுவின் கூற்றுப்படி, புதிய கொரோனா வைரஸ் மற்றும் இன்ஃப்ளூவன்ஸா ஏ ஆகியவை தோலின் மேற்பரப்பில் பயன்படுத்தப்பட்டபோது, புதிய கொரோனா வைரஸ் மனித தோல் பரப்பின்மீது சுமார் ஒன்பது மணித்தியாலங்கள் நீடித்தது. அதே நேரத்தில் இன்புளுவன்சா ஏயின் உயிர்வாழ்தல் சுமார் 1.8 மணித்தியாலம் இருந்தது. இதே வேளை வெப்பத்தைத் தாங்கும் கண்ணாடி மற்றும் பிளாஸ்டிக் போன்ற உயிர்வாழ்வதற்கு உகந்த மேற்பரப்புகளுக்கு இந்த குழு வைரஸ்களைப் பயன்படுத்தியது.
இதன்போது புதிய கொரோனா வைரஸ் சுமார் 58 முதல் 85 மணி வரை அவை செயலில் இருப்பது கண்டறியப்பட்டது. அதே நேரத்தில் இன்ஃப்ளூவன்ஸா ஆறு முதல் 11 மணித்தியாலம் வரை மாத்திரமே அவற்றில் உயிர் வாழ்ந்தமை கண்டறியப்பட்டுள்ளது.
ஆராய்ச்சியின் போது புதிய கொரோனா வைரஸ், எல்லா நிகழ்வுகளிலும் மிக நீண்ட காலம் தப்பிப்பிழைத்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-இ)

## நூல்கள் சேகரிப்பு

சாவகச்சேரி,ஒக்.20
தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு, சாவகச்சேரி நகர சபையின் பொது நூலகங்களால், நூல்கள் சேகரிப்பு வாரம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.
ஒவ்வொரு நூலக எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வதியும் மக்கள், வாசகர்களுக்குப் பயன்படக்கூடிய நூல்களை வழங்கி உதவுமாறு நகர சபையின் தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன் கேட்டுள்ளார்.
சாவகச்சேரி, மீசாலை, நுணாவில் ஆகிய நூலகங்களுக்கு நூல்களை வழங்க முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-9)

## பல்கலை பரீட்சைகள் ஒன்லைனில்

கொழும்பு,ஒக்.20
பல்கலைக்கழக பரீட்சைகளை ஒன்லைன் மூலம் நடத்துவது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனாத் தொற்றால், பல்கலைக்கழக மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் மற்றும் பரீட்சைகள் பாதிப்பின்றி முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்துள்ளார்.
இது தொடர்பாக பல்கலைக்கழகங்களுக்கு அறிவுறுத்தல் விடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-இ)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## அன்றுமுதல் இன்றுவரை

நாட்டில் இப்போது கொரோனாவின் ஆதிக்கம் பரந்து விட்டது. நாளாந்தம் நாட்டின் ஒவ்வொரு பகுதியில் இருந்தும் கொரோனாத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டு வருகின்றனர். அரசும், சுகாதார அமைச்சரும் கொரோனா சமூகப் பரவல் ஏற்பட வில்லை என்று அடிக்கடி கூறிக்கொண்டிருந்தாலும், உண்மை நிலைமை அதற்கு எதிர்மாறு என்றே ஒவ் வொரு நாள் சம்பவங்களும் சுட்டிக்காட்டுகின்றன.

கொரோனாத் தொற்று இப்போது கட்டுப்பாட்டை மீறி விட்டது. இந்த நிலைமையில் பொதுமக்கள் பொறுப்புடன் செயற்படுவதுதான், தொற்றைக் கட் டுப்படுத்த இருக்கும் ஒரே வழிமுறை. பொதுமக்கள் சுகாதாரபாதுகாப்பு நடைமுறைகளைச் சரியாகக் கடைப்பிடிப்பதுடன், சுகாதாரத் துறையினரின் அறி வுறுத்தல்களை இம்மியும் பிசகாது கடைப்பிடிப்பது அவசியம்.

தற்போது நாட்டுக்குள் உள்ள கொரோனாத் தொற்று நிலைமையே கையை மீறிப் போயுள்ளதோ என்று நினைக்கும் சந்தர்ப்பத்தில், இந்தியாவில் இருந்து இலங்கைக்கு கொரோனா வைரஸ் காவப்படலாம் என்ற அச்சமும் எழுந்துள்ளது. இந்தியாவில் இருந்து இலங்கைக்கு போதைப்பொருள்கள், மஞ்சள் போன்ற பொருள்கள் கடத்தப்படுவது அதிகரித்துள்ளமை இந்த அச்சத்துக்குக் காரணம்.

இந்தியாவில் இப்போது கொரோனாத் தொற்று நிலைமை எல்லைமீறிப் போய்விட்டது. அங்கு நாளாந்தம் ஆயிரக்கணக்கானோர் தொற்றுடன் இனங்காணப்படுகின்றனர். இந்தியாவில், தமிழகத் தில் தற்போது காணப்படும் கொரோனா வைரஸ் வீரியமானது என்று மருத்துவர்கள் கூறுகின்றனர்.

நிலைமை இப்படியிருக்க, அண்மைக்காலமாக மன் னாரில் போதைப்பொருள் கடத்துபவர்களும், மஞ் சள் கடத்துபவர்களும் அதிகம் கைது செய்யப்படு கின்றனர். மன்னாருக்கும், தமிழகத்துக்கும் நெருங்கிய தொடர்புகள் பண்டைக்காலம் முதலே இருக்கின் றன. சில நாள்களுக்கு முன்னர் கண்டெடுக்கப்பட்ட பண்டைய ஆயுதங்களும், சில காலத்துக்கு முன்னர் எடுக்கப்பட்ட பண்டைய நாணயங்களும் அதற்கு சான்று பகர்கின்றன.

மன்னாரில் இருந்து தமிழகம் இராமேஸ்வரத்துக்கு நிமிடக்கணக்கில் செல்லலாம் என்பது இந்தத் தொடர்புகளுக்கு முக்கிய காரணமாயிருக்கலாம். பண்டைய காலத்தில் வணிக ரீதியில், உறவு ரீதியில் இருந்த தொடர்பு இப்போது கடத்தல் என்னும் முறையில் தொடர்கின்றமை வேதனைக்குரியது.

அபாய நிலைமையைப் புரியாது தாங்கள் செய்யும் செயலால் ஏற்படக்கூடிய விபரீதங்களை அறியாது, இப்போதும் தமிழகத்தில் இருந்து போதைப் பொருள் கடத்தல் நடத்தப்படுகின்றது. அவற்றில் பல பாது காப்புத் தரப்பினரால் தடுக்கப்படுகின்றது. ஆனால் அனைத்தும் தடுக்கப்படும் என்பதற்கு எந்த உத்தர வாதமும் இல்லை. தமிழகத்தில் இருந்து வருவோரு டன் நெருங்கிப் பழகி, கொரோனாத் தொற்றைக் காவி வந்து சமூகத்தில் கலந்தால் அதன்பின்னர் ஏற் படும் ஆபத்து நினைத்தும் பார்க்க முடியாதது.

கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்த முழு மூச்சு டன் செயற்படும் சுகாதாரத் தரப்பினருக்கு, ஒத்தா சையாக சமூகப் பொறுப்புடன் மக்களும் நடந்து கொள்ள வேண்டும். வெள்ளம் வந்தபின்னர் அணை கட்டுவதில் பயனில்லை.

# வடக்கில் இதுவரை 24,641 வெடிபொருள்கள் அகற்றல்

கிளிநொச்சி,ஒக்.20

**வடக்கு மாகாணத்தில் மனிதாபிமான கண்ணிவெடி அகற்றலில் ஈடுபட்டு வரும் ஸார்ப் நிறுவனத்தால், இதுவரை 24 ஆயிரத்து 641 அபாயகரமான வெடிபொருள்கள் அகற்றப்பட்டுள் ளன என்று நிறுவனத்தின் நடவடிக்கை முகாமையாளர் ஓய்வு பெற்ற கப்டன் பிரபாத் நாரம்பனவ தெரிவித்தார்.**



ஜப்பான் நாட்டு நிதியுதவியுடன், ஸார்ப் மனிதாபிமானக் கண்ணி வெடி அகற்றும் அரச சார்பற்ற நிறுவனம், 2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தொடக்கம் வெடி பொருள்களை அகற்றி வருகி றது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டு சுட்டான் பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள அம்பகாமம் மற்றும் தச்சடம்பன் பகுதியிலும், கிளிநொச்சி மாவட் டத்தில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத் தின் கீழ் உள்ள முகமாலை மற்றும் ஆனை யிறவிலும் அபாயகரமான வெடிபொருள் கள் அகற்றப்பட்டுள்ளன.

தொடர்ந்தும் கண்ணிவெடி அகற்றும் பணி கள் முகமாலை மற்றும் ஆனையிறவு பகுதிகளில் முன்னெடுக்கப்பட்டு வருகின் றன எனவும் அவர் தெரிவித்தார். (சு-6)



## இராணுவத்தினரால் வீடுகள் கையளிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.20

வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங் களுக்காக, இராணுவத்தினரால் அமைக்கப் பட்ட வீடுகள் கையளிக்கப்பட்டமையுடன் புதிய வீடுகளுக்கான அடிக்கல் நேற்று நடப் பட்டது. உடுவில் பிரதேச செயலகத்துக்குட் பட்ட பிரதேசத்தில் புதிதாக வீடு அமைப்ப தற்கே அடிக்கல் நடப்பட்டது.

தென்னிலங்கையைச் சேர்ந்த நன்கொடை யாளர் ஒருவரின் நிதிப் பங்களிப்பில், இரா ணுவத்தினரின் மூலதனத்தில் சுமார் 7 லட் சத்து, 50 ஆயிரம் ரூபா நிதிப் பங்களிப்பில் வீடு அமைக்கப்படவுள்ளது.

யாழ். மாவட்டக் கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் செனரத் பண்டார மற்றும் நன் கொடையாளர் இணைந்து அடிக்கல்லை நட்டனர்.

அதேவேளை கொடிகாமம் பகுதியில் புதி தாக அமைக்கப்பட்ட வீடு நேற்றுக் கைய ளிக்கப்பட்டது. நிகழ்வுகளில் இராணுவ அதிகாரிகள், கிராம சேவையாளர்கள் கலந்து கொண்டனர். (சு-106,159)

## சுகாதார நடைமுறைகளை தொடர்ந்தும் பின்பற்றுங்கள்

### கட்டளைத் தளபதி வேண்டுகோள்

யாழ்ப்பாணம்,ஒக்.20

யாழ். மாவட்ட மக்கள் சுகாதார நடைமு றைகளைத் தொடர்ந்தும் பின்பற்றிச் செயற்பட வேண்டியது அவசியம் என்று மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் செனரத் பண்டார அறி வுறுத்தினார்.

இராணுவத்தினரால் வடமராட்சியில் அமைக்கப்பட்ட வீடுகளை, உரிமையா ளர்களிடம் கையளிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

தற்போது நாட்டில் கொரோனாத் தொற்று மிகவும் வலுவடைந்து வருகின்றது. வடக் கில் அவ்வாறான ஒரு நிலைமை ஏற்படாத வண்ணம், மக்கள் தங்களைப் பாதுகாத் துக்கொள்ள வேண்டியது காலத்தின் கட் டாயமாகும்.

யாழ்ப்பாணத்தில் இரண்டு தனிமைப்படுத் தல் நிலையங்கள் அமைக்கப்பட்டுள் ளன.

மக்கள் சுகாதார நடைமுறைகளைப் பின் பற்றி கொரோனாத் தொற்று ஏற்படாவண் ணம் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். தென்னிந்திய மீனவர்களுடன் தொடர்புகளைப் பேணுவது தொடர்பில் மிகவும் அவதானமாகச் செயற்பட வேண் டியுள்ளது- என்றார். (சு-20)

# ஹெரோய்ன் வைத்திருந்த இருவருக்கு 4 மாதங்கள் சிறை

சாவகச்சேரி,ஒக்.20

ஹெரோய்ன் போதைப்பொருளை உடை மையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைதான, நாவற்குழி ஐயனார் கோவிலடி யைச் சேர்ந்த இருவருக்கு, தலா நான்கு மாதங்கள் சாதாரண சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலை யடுத்து, நாவற்குழிப் பகுதியில், ஹெரோய் யின் போதைப் பொருளுடன் இருவர் கைது செய்யப்பட்டனர்.

33 மில்லி கிராம், 32 மில்லி கிராம் போதைப் பவுடர் உடைமையில் வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில், இருவருக்கு எதிராக பொலிஸாரால் சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, இதே குற்றச்சாட்டுக்களுடன் ஏற்கனவே இரு வரும் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு, தண் டிக்கப்பட்டவர்கள் என்று பொலிஸார் நீதி மன்றின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர்.

இதனையடுத்து இருவருக்கும் தலா நான்கு மாதங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட் டது. (சு-9)

## பரீட்சைகள் பிற்போடல்

யாழ்ப்பாணம்,ஒக்.20
2020 ஆம் ஆண்டுக்கான இளஞ்சைவப் புலவர் மற்றும் சைவப்புலவர் பரீட்சைகள் நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனாத் தொற்றுக் காரணமாக பிற்போடப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
ஏற்கனவே அறிவிக்கப்பட்ட திகதிகளில் பரீட்சைகள் நடைபெறாது எனவும், புதிய திகதிகள் மற்றும் பரீட்சை நிலையங்கள் பற்றி பின்னர் அறிவிக்கப்படும் என்று அகில இலங்கை சைவப்புலவர் சங்கச் செயலாளர் சைவப்புலவர் செ.த.குமரன் அறிவித்துள்ளார். (ஐ)

## சந்தைகளில் மக்கள் கூடுவதை தவிர்க்கவும்

யாழ்ப்பாணம், ஒக்.20
சந்தைகளில் மக்கள் கூட்டமாக நின்று பொருள்களை வாங்குவதைத் தவிர்க்குமாறு யாழ்ப்பாண மாநகர சுகாதாரப் பிரிவு அறிவுறுத்தியுள்ளது.
சமூக இடைவெளி மற்றும் சுகாதார விதிகளைக் கைக்கொண்டு மக்கள் சந்தைகளில் பொருள்களைக் கொள்வனவு செய்ய வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.
கொட்டடி, நாவாந்துறை, பாசையூர், குருநகர், கல்வியங்காடு போன்ற மீன் மற்றும் மரக்கறி சந்தைகளில் சுகாதார வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.
சந்தைகளுக்கு வருவோர் இவற்றைப் பின்பற்றி செயற்படுமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (ஐ-17)

## காயமடைந்த ஐவர் சிகிச்சையில்

சாவகச்சேரி,ஒக்.20
தென்மராட்சிப் பகுதிகளில் இடம்பெற்ற வீதி விபத்து மற்றும் தாக்குதல் சம்பவங்களில் ஐந்து பேர் காயமடைந்துள்ளனர்.
இந்தச் சம்பவங்கள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றன.
மட்டுவில் மடத்தடி, சாவகச்சேரி சண்முகம் வீதி, கொடிகாமம் கச்சாய் வீதி, மீசாலை மேற்கு, மந்துவில் வடக்கு ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்களே காயமடைந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். (ஐ-9)

# “20”வந்தே தீரும் நானும் ஆதரவு

## மஸ்தான் எம்.பி. தெரிவிப்பு

**மன்னார், ஒக்.20**
**தற்போது ஆட்சியில் உள்ள அரசாங்கம் மக்களுக்கு நல்லதைச் செய்ய வேண்டும் என்பதற்காகவே மக்கள் இந்த அரசாங்கத்திற்கு வாக்களித்துள்ளனர். மக்களின் எதிர்பார்ப்பை நிறை வேற்ற 20ஆவது அரசமைப்பு செயல்படுத்தப்படும். எனது ஆதரவும் அவர்களுக்கு இருக்கும். இவ்வாறு மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான காதர் மஸ்தான் தெரிவித்தார்.**



மன்னார் மாவட்டச் செயலக வளாகத்தில் நேற்றுத் திங்கட்கிழமை மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுத் தலைவர் அலுவலகம் வைபவ ரீதியாக திறக்கப்பட்டது.
அதனைத்தொடர்ந்து இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது;
அரசமைப்புத் திருத்தத்தை மாற்ற வேண்டும் என்பதற்காக மக்கள் பொதுஜன பெரமுனவுக்கு ஆணை வழங்கியுள்ளனர். நாட்டில் பல்வேறு நல்ல விடயங்கள் இடம் பெற்றுள்ளன. ஆனால் 20ஆவது அசமைப்புத் திருத்தத்துக்கு எதிராகச் சில மதத் தலைவர்கள் கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர். இவ் விடயம் தொடர்பாக எமது தலைவர்களுடன் கலந்துரையாடி திருத்தங்கள் மேற்கொண்டு மக்கள் பயனடையக் கூடிய வகையில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். மக்களுக்கு உதவித்திட்டங்கள்,அபிவிருத்திப் பணிகள் விரைவாகச் சென்றடைய வேண்டும் என்பதே ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரின் எதிர்பார்ப்பு. அதற்கு அமைவாகவே அரசமைப்புச் சீர்திருத்தத்தை மேற்கொள்ளுகின்றோம். இந்த அரசாங்கம் மக்களுக்கு நல்லதைச் செய்ய வேண்டும் என்பதற்காகவே மக்கள் இந்த அரசாங்கத்துக்கு வாக்களித்தனர். மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்ற 20 ஆவது திருத்தச் சட்டம் செயல்படுத்தப்படும். எனது ஆதரவும் அவர்களுக்கு இருக்கும் - என்றார்.
நிகழ்வில் மன்னார் மாவட்ட பதில் செயலர் எஸ்.குணபாலன்,மேலதிக செயலர் எஸ்.வசந்தகுமார்,மன்னார் மாவட்ட பிரதேச செயலகங்களின் பிரதேச செயலர்கள், பிரதம உள்ளகக் கணக்காளர், திட்டமிடல் பணிப்பாளர், சமுர்த்தி உயர் அதிகாரி, நாடாளுமன்ற உறுப்பினர்களின் இணைப்பாளர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.(ஐ-56)



## உதவிகள் வழங்கல்

புதுக்குடியிருப்பு, ஒக்.20
புதுக்குடியிருப்பு தேவிபுரம் கிராமத்தைச் சேர்ந்த வயோதிபர்களுக்கு உலர் உணவுப் பொருள்களும், மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் அண்மையில் வழங்கப்பட்டன.
தாய்த்தமிழ் பேரவையின் ஒழுங்கமைப்பில் லண்டனில் வசித்து வரும் கந்தப்பிள்ளை திலீபனின் ஏற்பாட்டில் அமரர் கதிரவேலுப்பிள்ளை தங்கமலரின் பிறந்தநாளை முன்னிட்டு இந்த உதவிகள் வழங்கப்பட்டன. (ஐ-222)




## டெங்கு விழிப்புணர்வு செயற்பாடு

மல்லாவி,ஒக்.20
மல்லாவி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு விழிப்புணர்வுச் செயற்பாடுகள் நேற்று முன்னெடுக்கப்பட்டன.
பொலிஸார், சுகாதாரத் திணைக்களம் மற்றும் பிரதேச சபையினர் ஆகியோர் இணைந்து டெங்கு பெருகும் சூழல் காணப்பட்ட இடங்களில் துப்புரவுப் பணிகளை மேற்கொண்டனர். (ஐ-ரி2)

# மறவன்புலவில் வைத்தே மானிய உரத்தை வழங்குக

## தென்மராட்சி தெற்கு விவசாயிகள் கோரிக்கை

தென்மராட்சி, ஒக். 20
எமக்கான மானிய உரவகைகள் மறவன்புலவு உரக் களஞ்சியத்தில் வைத்தே வழங்க வேண்டுமென தென்மராட்சி தெற்குப் பகுதி மக்கள் கோரியுள்ளனர்.
இது தொடர்பில் அங்கு நிரந்தரமாக விவசாய நடவடிக்கையில் ஈடுபடும் விவசாயிகள் மேலும் தெரிவித்ததாவது;
தென்மராட்சி தெற்கு பிரதேசத்தில் தனங்களப்பு ,மறவன்புலவு, தச்சன் தோப்பு, கோவிலாக்கண்டி,கைதடி, நாவற்குழி, நாவற்குழி கிழக்கு போன்ற கமக்கார அமைப்புகள் உள்ளன.
இந்த அமைப்புக்களில் மறவன்புலவு அமைப்புக்குட்பட்ட விவசாயிகளுக்கு மட்டும் அங்குள்ள உரக் களஞ்சியத்தில் வைத்து மானிய உரவகைகள் வழங்க அமைப்பினர் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். இந்த உரக் களஞ்சியம் எமது குடியிருப்புகளுக்கும் மிக அண்மையில் உள்ளது. நாங்கள் சைக்கிளில் சென்று எமக்கான உரவகைகளைப் பெறமுடியும். மானிய உரவகைகள் கைதடி கமநல சேவைகள் நிலையத்தில் வழங்கப்படுகின்றமையால் அவற்றை வாகனங்களில் ஏற்றிச் செல்லவேண்டும். இதனால் எமக்குரிய உரவகைகளை மறவன்புலவில் உள்ள உரக் களஞ்சியத்தில் வைத்து வழங்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.
அமைப்புகளின், நிர்வாகத்தினர் உரிய கடிதத்தை வழங்கினால் அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்று கமநல சேவைகள் நிலையத்தினர் தெரிவித்தனர். எனினும் அமைப்புகளின் தலைவர்கள் இந்தப் பகுதிகளில் வசிக்காதமையால் ஒப்புதல் வழங்க மறுக்கின்றனர் - என்றனர். (ஐ-9)



## நுழைவாயில் திறப்பு

கொடிகாமம்,ஒக்.20
விடத்தற்பளை சம்பாவெளி வீரகத்தி விநாயகர் ஆலயத்துக்கான புதிய சித்திர சிற்ப நுழைவாயில் நேற்றுமுன்தினம் திறக்கப்பட்டது.
ஆலய பரிபாலன சபைத் தலைவர் ம.பரமேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் ஆலய முதன்மைக் குரு பிரம்ம சிறீ நடராசக் குருக்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டு நுழைவாயில் திறக்கப்பட்டது.
நிகழ்வில் சாவகச்சேரி பிரதேச சபை உப தவிசாளர் செ.மயூரன், சிற்பாற்சாரியார் செ.ரவீந்திரன் மற்றும் அவரது பணியாளர்கள், ஆலய தொண்டர்கள், அடியார்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (ஐ-159)

## கொரோனா அபாயம்;

# சிரமதானப் பணிக்கும் பொலிஸார் தடை

கிளிநொச்சி, ஒக்.20

கொரோனா அபாயத்தைக்கருத்தில் கொண்டு, சிரமதானப் பணியும், பொது சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் பொலிஸாரால் தடுக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் கிளிநொச்சி, சிவநகர்ப் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

கரைச்சி பிரதேச செயலகத்துக்குட்பட்ட கே.என்/35 கிராம அலுவலர் பிரிவின் உருத்திரபுரம் சிவநகர் கிராமத்தில் சமுர்த்தி உதவி பெறும் பயனாளிகளுக்கு, உருத்திரபுரம் கூழாவடி சந்தைப் பகுதியின் சுற்றுப்புறத்தைச் சிரமதானப் பணி மூலம் துப்புரவு செய்வதற்கு, சமுர்த்திச் சங்கக் குழுக்களின் தலைவர்களால் அறிவிக்கப்பட்டது. அதன்படி சமுர்த்திப் பயனாளிகள் அங்குசென்று சந்தையின் சுற்றுப்புறத்தைத் துப்புரவு செய்தனர். இதன்போது அவ்விடத்திற்கு வந்த பொது சுகாதாரப் பரிசோதகர் மற்றும் பொலிஸார் கொரோனா பரவலைத் தடுப்பதைக் கருத்திற் கொண்டு மக்கள் ஒன்று கூடுவதைத் தவிர்க்க வேண்டிய காரணத்தைச் சுட்டிக்காட்டி, சிரமதானத்தை தடுத்து நிறுத்தினர். (ப-ரி)

# அரசின் இன அடக்குமுறையை சந்திக்க தமிழர்கள் தயாரில்லை

## கூட்டமைப்பு வலியுறுத்து

மட்டக்களப்பு, ஒக்.20

தற்காலத்தில் அரசு எடுக்கும் ஒவ்வொரு விடயங்களும் தமிழர்களின் இன, மத, கலாசாரத்தைக் கேள்விக்குறியாக்குகின்ற அடிப்படையிலேயே கையாளப்படுகின்றன. நாட்டில் மீளவும் ஓர் இன ரீதியான அடக்குமுறையைச் சந்திக்கத் தமிழ் மக்கள் தயாரில்லை. இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் எமது இன ரீதியான விகிதாசாரம் பின் நோக்கியே செல்கின்றது. அதிலும் கிழக்கு மாகாணம் கேள்விக்குறியான நிலையில் காணப்படுகின்றது. கடந்த காலத்தில் இவற்றிற்கான காரணம் போர்ச் சூழலாகக் குறிப்பிட்டோம். தற்காலத்தில் அரசு எடுக்கும் ஒவ்வொரு விடயங்களும் எங்களது மக்களின் கலாசாரத்தைக் கேள்விக்குறியாக்குகின்ற அடிப்படையிலேயே கையாளப்படுகின்றன.

இவ்வாறான செயற்பாடுகளிலிருந்து எங்களுடைய கலாசாரத்தையும், மக்களையும் பாதுகாக்கின்ற விடயம் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்துள்ளது. யாழ்ப்பாணத்தில் தமிழ்த் தலைவர்கள் இணைந்த தமிழ் மக்கள் கூட்டமைப்பு ஒன்றிணைந்து கூடிய கூட்டத்தில் ஜனாதிபதியின் தொல்பொருள் செயலணியின் செயற்பாடுகள் குறித்து அதிகம் பேசப்பட்டது.

குறிப்பாக கிழக்கு மாகாணத்தை மையப்படுத்திய ஜனாதிபதியின் தொல்பொருள் செயலணி அதன் செயற்பாடுகளை மிகவும் தீவிரப்படுத்தியுள்ளது. முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆரம்பித்து அம்பாறை மாவட்டத்தின் பொத்துவில், திருக்கோவில், மட்டக்களப்பு, திருகோணமலை போன்ற எமது பூர்வீக நிலங்களை அத்துமீறிப் பிரவேசித்து கபளீகரம் செய்வதற்கான முன்னெடுப்புக்கள் நடைபெற்று வருகின்றன. இவ்வாறான செயற்பாடுகள் எதிர்காலத்தில் இனரீதியான முரண்பாடுகளை ஏற்படுத்துவதற்கான அரசின் நடவடிக்கைகளாகவே அமைந்துள்ளன. இதனை அவர்கள் தவிர்க்க வேண்டும் - என்றார். (ப-150)

# கொரோனா வைரஸ் மீண்டும் பாதிக்கும்

## அறிவியல் ஆலோசகர்கள் எச்சரிக்கை

கொழும்பு, ஒக்.20

கொரோனா பாதிப்புகளில் இருந்து குணமடைந்த பின்னரும் மீண்டும் பாதிப்புகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்று இங்கிலாந்து அரசின் மூத்த அறிவியல் ஆலோசகர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் அந்த ஆலோசகர்கள் குழு வெளியிட்ட அறிக்கையில் மேலும் உள்ளதாவது;

கொரோனா வைரஸானது பரவி வரும் நிலையில், ஒருவருக்கு பாதிப்புகள் மீண்டும் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஒவ்வொரு தொற்றுக்கும் இடையேயான கால இடைவெளி எவ்வளவு குறைந்த அளவில் இருக்கலாம், எந்த நிலையில், குணமடைந்த நபர்கள் மீண்டும் தொற்று ஏற்படுவதற்கான ஆபத்தில் செல்கின்றனர் என்பது தெளிவாகத் தெரியவரவில்லை.

ஆனால், காய்ச்சல் மற்றும் பொதுவான சளி போன்றவற்றை ஏற்படுத்தும் பிற கொரோனா வைரஸுகளை மனிதர்கள் எதிர்கொள்வது போன்று கொவிட்-19 வைரஸும் மீண்டும் பாதிப்புகளை ஏற்படுத்தக் கூடிய வாய்ப்பு நீடித்திருக்கிறது - என்றுள்ளது. (ப-இ)

# "20"ஐ நிறைவேற்ற இ.தொ.கா. ஆதரவு

## அதன் நிதிச் செயலாளர் தெரிவிப்பு

நுவரெலியா, ஒக்.20

அரசமைப்பின் 20ஆவது திருத்தச்சட்ட வரைவுக்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆதரவு வழங்கும் என்று அக்கட்சியின் நிதிச்செயலாளரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஷ்வரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

19ஆவது திருத்தச்சட்டத்தை இல்லாதொழிக்க வேண்டும் எனக் கோரியே நாட்டு மக்கள் ஜனாதிபதிக்கு வாக்களித்தார்கள். அதனை நிறைவேற்றுவதற்காகவே 20ஆவது திருத்தச்சட்ட வரைபு கொண்டு வரப்படுகின்றது. அதற்கு நாம் ஆதரவு வழங்குவோம். நாடாளுமன்றத்தில் அடுத்தவாரம் 20 ஆவது திருத்தச் சட்டம் நிறைவேறும். அதற்கான பெரும்பான்மை பலமும் ஆளுங்கட்சி வசம் இருக்கின்றது. எதிரணி உறுப்பினர்களும் பேச்சு நடத்தியுள்ளனர். அவர்களும் ஆதரவு வழங்குவார்கள் என நம்புகின்றோம் - என்றார். (ப)

# சாவகச்சேரி சபை அமர்வு இன்று

கொடிகாமம், ஒக். 20

சாவகச்சேரி பிரதேச சபையின் மாதாந்த சபை அமர்வு இன்று செவ்வாய்க்கிழமை தவிசாளர் க.வாமதேவன் தலைமையில் பிரதேச சபையின் சபா மண்டபத்தில் நடைபெறவுள்ளது

இந்த அமர்வில் அபிவிருத்தி தொடர்பான விடயங்கள் கலந்துரையாடப்படுவதுடன், முக்கியமான சில பிரேரணைகளும் சமர்ப்பிக்கப்படும் என உபதவிசாளர் செ.மயூரன் தெரிவித்தார் (ப-159)

# தாக்குதல் சம்பவம்; இளைஞன் காயம்

கிளிநொச்சி, ஒக்.20

தாக்குதலுக்குள்ளான நிலையில், இளைஞர் ஒருவர் கிளிநொச்சி பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சிவபுரம் குடியிருப்பு பகுதியிலிருந்து நேற்றுமுன்தினம் இரவு 7 மணியளவில் அவர் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

கசிப்பு அருந்தியவர்களுக்கிடையில் ஏற்பட்ட, முரண்பாடு காரணமாக இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தின்போது குறித்த நபர் தாக்குதலுக்கு இலக்கானார் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நான்கு நபர்கள் மேற்படி இளைஞனைத் தாக்கினர் என இளைஞனின் தாயாரால் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. சிவபுரம் குடியிருப்பு 10 ஆம் ஒழுங்கையைச் சேர்ந்த 22 வயதுடைய இளைஞனே காயமடைந்துள்ளார். சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ப-ரி)

# போக்குவரத்துக்கு இடையூறு; தவிசாளர்களுக்கு அதிகாரம்

யாழ்ப்பாணம், ஒக்.20

உள்ளூராட்சி சபைகளுக்குட்பட்ட வீதிகளில், போக்குவரத்திற்கு இடையூறாகக் காணப்படும் கட்டட நிர்மாணங்கள், மரங்கள் போன்றவை தொடர்பில் தவிசாளர்கள் உள்ளூராட்சி மன்ற சட்டவிதிகளுக்கு அமைய செயற்படலாம் என்று வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.

வடக்கின் 5 மாவட்டங்களின் உள்ளூராட்சி மன்றத் தவிசாளர்கள், செயலாளர்களுக்கு அவர் அனுப்பி வைத்த கடிதத்தில் மேலும் உள்ளதாவது;

வடக்கு மாகாண வீதி விவரங்கள் திரட்டும்போது அநேகமான வீதிகளில் வீதியை மிஞ்சிய உட்கட்டுமானங்கள், போக்குவரத்தை இடையூறு செய்யும் மாக்கொப்புகள், மரங்கள் என்பன தொடர்பில் அறியக் கிடைத்துள்ளது.

எனவே சட்டத்தின் முன் சபைகளின் தவிசாளர்கள், செயலாளர்கள் செயற்படுவதன் ஊடாக மேற்படி வீதிகளின் இடையூறுகளுக்கு நடவடிக்கை எடுத்து இலகு போக்குவரத்திற்கு நடவடிக்கை எடுக்கலாம் என்றுள்ளது. (ப-50)



யாழ்.போதனா வைத்தியசாலையின் குருதி வங்கியில் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட மாபெரும் குருதித்தான முகாமில் விதையனைத்தும் விருட்சமே அமைப்பினூடாக 53 குருதிக் கொடையாளர்கள் குருதி வழங்கியுள்ளனர்.

போதனா வைத்தியசாலையின் குருதி வங்கியில் ஏற்பட்ட குருதித் தட்டுப்பாட்டைக் கருத்தில் கொண்டே இவ்வாறு குருதி வழங்கப்பட்டுள்ளது. இதில் யாழ். நகர ரோட்டறிக் கழகத்தினர், விதையனைத்தும் விருட்சமே குழுமத்துடன் கைகோர்த்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ப-222)

### வடமராட்சி கிழக்கு, மருதங்கேணியில்

# சிகிச்சைகளை ஆரம்பித்தது கொரோனா வைத்தியசாலை

யாழ்ப்பாணம், ஒக்.20

**யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேச மருத்துவமனையை கொரோனா மருத்துவ நிலையமாக மாற்றும் நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ள நிலையில், மருத்துவப் பணியாளர்களும் நேற்றுக் காலை கடமைகளைப் பொறுப்பேற்றனர்.**

மாவட்டத்துக்கு ஒரு கொரோனா வைத்தியசாலை அமைக்கும் அரசாங்கத்தின் திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணத்துக்கான கொரோனா மருத்துவமனையாக மருதங்கேணிப் பிரதேச மருத்துவமனை தெரிவு செய்யப்பட்டு அதன் பணிகள் அனைத்தும் நிறைவு செய்யப்பட்டு நேற்று அங்கு பணியாற்றுவதற்கான மருத்துவர்கள் மற்றும் தாதியர்கள் உட்பட மருத்துவப் பணியாளர்கள் அழைக்கப்பட்டிருந்தனர்.

அதற்கான முன்னேற்பாடாக அழைக்கப்பட்டிருந்த மருத்துவப் பணியாளர்கள் அனைவருக்கும் கொரோனாத் தடுப்பு தொடர்பான பயிற்சி வகுப்புகள் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் கேதீஸ்வரன் தலைமையில் மேற்கொள்ளப்பட்டன. பணியாளர்கள் அனைவரும் காலை 8 மணிக்கு தங்களுடைய கடமைகளைப் பொறுப்பேற்றனர்.



**மக்கள் எதிர்ப்பு**

இதேவேளை, மருதங்கேணி பிரதேச மருத்துவமனையில் மருத்துவர்களுடைய பற்றாக்குறை, விடுதிகள் இயங்காத நிலை, வெளிநோயாளர் பிரிவு ஒழுங்காக இயங்காத நிலை போன்ற பிரச்சினைகள் இருக்கும்போது, கொரோனா மருத்துவமனை அமைக்கப்பட்டிருப்பது தமக்கு வேதனை அளிக்கிறது என்று தெரிவித்த மருதங்கேணி பிரதேச மக்கள், அரசின் செயற்பாட்டை எதிர்த்து, மருத்துவமனைமுன் கூடினர். இதனால் அங்கு பொலிஸார் வரவழைக்கப்பட்டனர்.

வீதியால் சென்ற அனைவரும் சோதனைக்குட்படுத்தப்பட்டனர். சம்பவ இடத்திலிருந்து பலர் விரட்டப்பட்டனர்.

**மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் கேதீஸ்ஸ்வரன் கருத்து:**

இந்தச் சம்பவம் தொடர்பில் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் கேதீஸ்வரனைத் தொடர்புகொண்டு கேட்டபோது;

முதலாவது கொரோனா நோயாளியாக இருக்கின்ற பருத்தித்துறை பஸ் டிப்போவின் நடத்துநரை இன்று பிற்பகல் 3 மணிக்குப் (நேற்று) பின்னர் அனுமதித்து சிகிச்சை அளிக்க உள்ளோம். சிகிச்சை அளிக்கும் மருத்துவ உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி நடத்தப்பட்டுள்ளது. மருதங்கேணி பிரதேச மருத்துவமனையில் இருந்த வெளிநோயாளர் சேவையை பிறிதொரு கட்டடத்தில் இயக்கும் நடவடிக்கைகள் இடம் பெற்றுள்ளன. உள் நோயாளர்கள், அம்புலன்ஸ் ஊடாகப் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டு சிகிச்சை அளிக்கப்படுவார்கள். மக்கள் எவரும் அச்சப்படத் தேவையில்லை- என்றார். (ப-26,160)

---

### இலகு ரயில் திட்டம் நிறுத்தம்;

## மன்னிப்புக் கோரினார் சம்பிக்க ரணவக்க

கொழும்பு, ஒக்.20

ஜப்பானின் நிதியளிக்கப்பட்ட இலகு ரயில் திட்டம் நடப்பு அரசாங்கத்தால் நிறுத்தப்பட்டமை காரணமாக ஜப்பானுக்கு ஏதேனும் அசௌகரியங்கள் ஏற்பட்டிருந்தால் அதற்காக மன்னிப்புக் கோருகிறோம் என்று முன்னாள். அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் முன்னாள் அமைச்சர் , ஜப்பான் பிரதமர் யோஷிஹைட் சுகாவுக்கு எழுதிய கடிதத்தில் மேலும் உள்ளதாவது;

2008/2012ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஜெய்காவின் நிதியுதவியில் பஸ் நவீனமயமாக்கல், ரயில் மின்மயமாக்கல், இரட்டை வரி ரயில் சேவை என்பன அடையாளம் காணப்பட்டன. அதைத் தொடர்ந்து, 2015/2016ஆம் ஆண்டுகளில் ஜப்பானிய மற்றும் இலங்கை வல்லுநர்கள் கூட்டாக மேற்கொண்ட இரண்டாவது விரிவான ஆய்வில் உயர்ந்த தாக்க மூலோபாயத் திட்டங்கள் அடையாளம் காணப்பட்டன. எனினும் ஜப்பானிய அரசாங்கத்துக்கு நன்கு தெரிந்த காரணங்களால் இந்தத் திட்டம் இலங்கையின் நடப்பு அரசாங்கத்தால் நிறுத்தப்பட்டுள்ளன. இதனால் ஜப்பானுக்கு ஏற்பட்டுள்ள அசௌகரியங்களுக்காக இலங்கை மக்கள் சார்பாக அந்த நாட்டின் அரசாங்கத்திடமும், ஜப்பான் மக்களிடமும் மன்னிப்புக் கோருகின்றோம் - என்றுள்ளது, (ப-இ)

---

## விபசாரத்துக்காக பெண்களை தடுத்து வைத்திருந்தவருக்கு 2 வருட கடூழியச் சிறை

விபச்சாரத்தில் ஈடுபடுவத்துவதற்காக, 5 பெண்களைத் தடுத்து வைத்திருந்த குற்றச்சாட்டு உள்ளிட்ட 5 குற்றச்சாட்டுகளின் கீழ், பெண்ணொருவருக்கு 10 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 2 வருட கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி தம்மிக கனேபொல முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, வழக்கின் குற்றவாளி தமது குற்றத்தை ஒப்புக்கொள்வதாக நீதிமன்றுக்கு அறிவித்துள்ளார். இதனையடுத்து நீதிபதியால் இச் சிறைத் தண்டனைத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. "ஜீனா மெடம்" எனப்படும் ரோஸ்மேரி ஜூட் பிலிசியா என்ற பெண்ணுக்கே இவ்வாறு தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனைக்கு மேலதிகமாக 5 இலட்சம் ரூபா அபராதமும் செலுத்துமாறு உத்தரவிட்ட நீதிபதி இந்த அபராதத் தொகையைச் செலுத்தத் தவறின் மேலதிகமாக 5 வருட சிறைத்தண்டனையை விதிக்குமாறும் உத்தரவிட்டார். (ப-இ)

---

## நியூசிலாந்தின் புதிய பிரதமருக்கு ஜனாதிபதி வாழ்த்து

கொழும்பு, ஒக்.20

நியூசிலாந்து பொதுத்தேர்தலில் மீண்டும் வெற்றி பெற்று பிரதமராகத் தெரிவான ஜெசிந்தா ஆர்டனுக்கு இலங்கை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

தனது ருவிட்டர் பக்கத்திலேயே ஜனாதிபதி அவருக்கு வாழ்த்துத் தெரிவித்துள்ளார். கொரோனாவைக் கட்டுப்படுத்துவதில் ஜெசிந்தா ஆர்டனின் தலைமைத்துவம் முன்மாதிரியாக இருந்தது என ஜனாதிபதி இதில் தெரிவித்துள்ளார்.

நியூசிலாந்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பொதுத்தேர்தலில் தற்போதைய பிரதமரான ஜெசிந்தா ஆர்டனின் ஆளும் தொழிலாளர் கட்சி 49 வீத வாக்குகளைப் பெற்று அபார வெற்றி பெற்றது. நாடாளுமன்றத்தில் மொத்தமுள்ள 120 இடங்களில் 64 இடங்களை ஜெசிந்தாவின் ஆளும் கட்சி கைப்பற்றியுள்ளது.

இதேவேளை, நியூசிலாந்தின் பிரதமராக இரண்டாவது முறையாகப் பதவியேற்கவுள்ள ஜெசிந்தாவுக்கு பல்வேறு நாடுகளின் தலைவர்கள் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர். (ப-இ)

---

## கோப், கோபா குழுக்களின் கூட்டங்கள் ஒத்திவைப்பு

கொழும்பு, ஒக்.20

இந்த வாரத்தில் நடத்த திட்டமிடப்பட்ட அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு (கோப் குழு) மற்றும் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு (கோபா குழு) கூட்டங்கள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

தற்போது நாட்டில் நிலவும் கொரோனா பரவல் நிலையைக் கருத்திற்கொண்டு கோப் குழுத் தலைவர் பேராசிரியர் சரித ஹேரத் மற்றும் கோபா குழுத் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண ஆகியோர் இந்த முடிவை எடுத்துள்ளனர்.

இன்று முதல் 23 ஆம்திகதி வரை நடத்தத் திட்டமிடப்பட்ட கோபா மற்றும் கோப் குழு அமர்வுகளே இவ்வாறு ஒத்திவைக்கப்பட்டுள்ளன. (ப)

---

# தீர்மானம்மிக்க வாரம் இது



## இராணுவத் தளபதி எச்சரிக்கை

மினுவாங்கொட ஆடைத் தொழிற்சாலையில் ஏற்பட்ட கொரோனா பரவல் காரணமாக, இந்த வாரம் மிகவும் தீர்மானம்மிக்கது என்று இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

முதலாவது கொரோனா நோயாளி அடையாளம் காணப்பட்ட நாளிலிருந்து மூன்றாவது வாரம் இதுவாகும். மினுவாங்கொட ஆடைத் தொழிற்சாலை ஊடாக ஏற்பட்ட கொரோனா கொத்தணி காரணமாக, ஊழியர்கள் மற்றும் அவர்களுடன் பழகியவர்கள் தற்போது கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளனர். வைரஸ் தொற்றுக்குள்ளானவர்கள் மற்றும் அவர்களுடன் பழகியவர்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளுக்குப் பயணம் மேற்கொண்டுள்ளனர் என ஆரம்பத்திலேயே கூறப்பட்டது. எனினும் தனிமைப்படுத்தப்பட்ட முதலாவது தரப்பினர்

வழங்கிய தகவலுக்கமைய கண்டுபிடிக்கப்பட்ட தொற்றாளர்கள் தனிமைப்படுத்தப்பட்டனர்.

அவ்வாறு தகவல் வழங்காதவர்கள் இருப்பின் அவர்களுக்கு கொரோனா தொற்றியுள்ளதா? இல்லையா என்பது இந்த வாரத்திற்குள் கண்டுபிடித்துவிட முடியும். எனவே இந்த வாரம் மிகவும் தீர்மானம்மிக்கது - என்றார். (ப-இ)

# கட்டுக்கரை குளத்தின் கீழ் 24,438 ஏக்கர் நெற் செய்கை

## மன்னார் விவசாயக் குழு கூட்டத்தில் தீர்மானம்

**மன்னார், ஒக்.20**

**கட்டுக்கரை குளத்தில் 10 ஆயிரத்து 900 கன அடி நீர் காணப்படுவதனால் கட்டுக் கரை குளத்தின் கீழ் 24 ஆயிரத்து 438 ஏக்கரில் விவசாயப் பயிர்ச் செய்கையை மேற்கொள்வது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.**

மன்னார் மாவட்டத்தின் கட்டுக்கரைக் குளத்தின் கீழ் மேற்கொள்ளப்படவுள்ள கால போக நெற்செய்கை தொடர்பான விவசாயக் குழு கூட்டத்தின்போதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

மன்னார் பதில் மாவட்டச் செயலர் எஸ். குணபாலன் தலைமையில் மாவட்ட செயலகக் கேட்போர்கூடத்தில் நேற்று விவசாயக்குழுக் கூட்டம் நடைபெற்றது.



கூட்டத்தில், மன்னார் மாவட்டத்தில் விவசாய உற்பத்திகளைத் தன்னிறைவை ஏற்படுத்தும் வகையில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள், விவசாயச் செய்கைகளைப் பாதிக்கும் கிருமிகள், தத்துக்கிளி தாக்கம் ஆகியவை தொடர்பான விளக்கங்கள், கால்நடை மேய்ச்சல் தரைகள், கால்நடைகளுக்கு ஏற்படும் கால்வாய் நோய் மற்றும் ஏனைய நோய்களைக் கட்டுப்படுத்துவது, கால்நடை வளர்ப்பாளர்கள் இலாபம் பெறுவதற்கான செயற்பாடுகள் தொடர்பான தெளிவுபடுத்தல்களை துறைசார்ந்த அதிகாரிகள் விவசாயிகளுக்கு வழங்கினர். அதேவேளை தரமான விதைகளைப் பயன்படுத்தி அதிக விளைச்சளைப் பெற மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டன.

இதில் விவசாயத் திணைக்களத்தின் கீழ் செயற்படும் அனைத்து அலுவலகங்களின் உதவிப் பணிப்பாளர்கள், உயர் அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள், மாவட்டச் செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஐ-56)

# தேசிய வாசிப்பு மாதத்தில் பல்வேறு போட்டிகள்

சாவகச்சேரி,ஒக். 20

சாவகச்சேரி நகரசபையின் மீசாலை பொது நூலகத்தினர் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு மாணவர்கள் மற்றும் வாசகர்களிடையே போட்டிகளை நடத்தவுள்ளனர்.

வாசகர்களுக்கு சித்திரம், வீட்டுத் தோட்டம், கவிதை மற்றும் கட்டுரை ஆகிய போட்டிகளும்,முன்பள்ளி மாணவர்களுக்கு கதைகூறல் போட்டியும் நடைபெறவுள்ளன.

“நூலொன்றை வாசிப்போம் நாட்டைக் கட்டியெழுப்புவோம்” என்னும் தொனிப் பொருளில் போட்டிகள் நடத்தப்படவுள்ளன. போட்டிக்கான விண்ணப்பங்களை எதிர்வரும் 23 ஆம் திகதிக்கு முன்னர் மீசாலை பொது நூலகத்துக்கு அனுப்பி வைக்குமாறு நகரசபைத் தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன் அறிவித்துள்ளார்.

சித்திரப் போட்டி, கவிதைப் போட்டி போன்றவற்றுக்கு போட்டித் தினத்தன்று தலைப்புகள் வழங்கப்படும்.

நூலக எல்லைக்குள் வீட்டுத் தோட்ட பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ள செய்கையாளர்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் நூலகத்தில் பதிவு செய்யுமாறும் போட்டியில் இயற்கை விவசாயம் மற்றும் ஆயுர்வேத மூலிகைகள் உற்பத்திக்கு முன்னுரிமை வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கட்டுரைப் போட்டியில் கட்டுரைகள் அனைத்தும் தொனிப் பொருளுடன் தொடர்புபட்டதாக இருப்பதுடன் சுற்றுச்சூழல் பாதுகாப்பு, இயற்கையுடன் இணைந்த வாழ்க்கை, இயற்கை விவசாயம், ஆயுர்வேத மருத்துவம்,உள்ளூர் கண்டுபிடிப்புகள், உள்நாட்டு கைத்தொழில்கள் மற்றும் சுய தொழில்கள் தொடர்பானவையாக இருத்தல் வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-9)

# காஞ்சிரமோட்டைக்கு விரைவில் மின்சாரம்

## திலீபன் எம்.பி. நடவடிக்கை

வவுனியா,ஒக்.20

வவுனியா காஞ்சிரமோட்டை கிராம மக்கள் எதிர்கொண்டு வந்த பிரச்சினைகளுக்கு காணி அமைச்சருடன் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலில் தீர்வு பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கு.திலீபன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

வவுனியா காஞ்சிரமோட்டைக் கிராம மக்கள் மீள்குடியேறிய நிலையில் வனவளத் திணைக்களத்தால் பல்வேறு இன்னல்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர் என்று எனது கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டிருந்தது. அது தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஊடாக நேற்று காணிஅமைச்சர் சி.பி.ரத்நாயக்கவுடன் விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

மக்களுக்கு மின்சாரத்தைக் கொண்டு செல்வதில் வனவளத் திணைக்களத்தால் ஏற்படுத்தப்படும் தடைகள் குறித்து தெரிவிக்கப்பட்டது. உடனடியாக வன வளத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்துடன் தொடர்புகொண்டு மக்களுக்கு மின்சாரத்தை வழங்க ஏதுவான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

அத்துடன் இம் மக்கள் தொடர்ச்சியாக யானைப் பிரச்சினைக்கு முகம் கொடுத்து வருவதனால் யானை வேலி அமைப்பதற்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எனவே மிக விரைவில் இம் மக்களின் நிம்மதியான வாழ்க்கைக்கு ஏதுவான வழிவகைகள் செய்து கொடுக்கப்படும் - என்றார். (ஐ-110.18)

# முகக்கவசம் தொண்டையில் அணிவோரும் தப்பமுடியாது

## சாவகச்சேரி பொலிஸார் எச்சரிக்கை

சாவகச்சேரி ஒக்.20

முகக்கவசத்தை தொண்டையில் அணிந்தால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று சாவகச்சேரி சந்தையில் உள்ள வர்த்தகர்கள் மற்றும் வியாபாரிகளுக்கு பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

கொரோனா இரண்டாம் அலை தொடர்பாக முகக்கவசம் அணியுமாறு சம்பந்தப்பட்ட பலரும் அறிவித்துவரும் நிலையில் சந்தையில் உள்ள வர்த்தகர்களும் வியாபாரிகளும் முகக்கவசங்களைத் தொண்டைக் கவசமாகப் பயன்படுத்துகின்றமை பொலிஸாரால் அவதானிக்கப்பட்டுள்ளது. சந்தைக்கு வரும் பொதுமக்கள் முகக்கவசம் அணிந்துவரும் நிலையில் வர்த்தகர்களும் வியாபாரிகளும் முகக்கவசத்தைத் தொண்டையில் அணிந்தவாறு வியாபாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில் கடந்த சனிக்கிழமை சந்தையில் திடீர் பரிசோதனைகளை மேற்கொண்ட பொலிஸார் முகக்கவசம் அணியாத நிலையில் காணப்பட்ட வர்த்தகர்கள் மற்றும் வியாபாரிகள் ஆகியோரை எச்சரிக்கை செய்தனர். முகக்கவசத்தை சரியான முறையில் அணியாதோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அறிவித்தனர். (ஐ-9)

# கிறிஸ்தவ சபைக்கும் சேமக்காலை வேண்டும்

## சாவ. நகரசபை உறுப்பினர் வலியுறுத்து

சாவகச்சேரி ஒக். 20

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் கிறிஸ்தவ சபைகளுக்கெனத் தனியான சேமக்காலை வழங்க வேண்டும் என்று சாவகச்சேரி நகர சபை உறுப்பினர் திருமதி சுபோதினி பவுலினா தயாளராசா கோரினார்.

சாவகச்சேரி நகரசபையில் அண்மையில் நடைபெற்ற அமர்வின் போதே அவர் இவ்வாறு கோரினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வாழும் ரோமன் கத்தோலிக்க மற்றும் ரோமன் கத்தோலிக்கம் அல்லாத மக்களுடன் தற்போது பல கிறிஸ்தவ சபைகளின் மக்கள் வசித்து வருகின்றனர். இவ்வாறான மக்களின் வீடுகளில் இறப்பு நிகழும் போது, உடலை நல்லடக்கம் செய்வதற்கு சேமக்காலை இல்லாததால் அவர்கள் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இதனால் அவ்வாறான கிறிஸ்தவ சபைகளுக்கான தனியான சேமக்காலை அமைப்பதற்கு இடம் வழங்க வேண்டும். இது தொடர்பில் பிரதேச செயலகம் அல்லது நகரசபை கவனம் செலுத்தவேண்டும் - என்றார். (ஐ-9)

# குடிதண்ணீருக்கு விவரம் சேகரிப்பு

சாவகச்சேரி,ஒக்.20

ஜனாதிபதியின் சௌபாக்கியா தக்ம செயற்றிட்டத்துக்கு அமைவாக கிராம அலுவலர் பிரிவு ரீதியாக மக்களின் குடிதண்ணீர்த் தேவை தொடர்பான விவரங்கள் மாவட்டச் செயலகத்தால் கோரப்பட்டுள்ளன.

நீர் வழங்கல் அமைச்சுடன் தேசிய நீர் வழங்கல் அதிகார சபையால் இந்தத் திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது.

இதன்படி ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிலும் குடிதண்ணீர் தட்டுப்பாடு காணப்படும் கிராமங்களின் விவரங்களை அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-9)

# சதுர்த்தி விரத வழிபாடு

சதுர்த்தி விரதத்தை முன்னிட்டு கோப்பாய் வடக்கு வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் இன்று செவ்வாய்க்கிழமை சிறப்பு வழிபாடுகள் நடைபெறவுள்ளன.

பிற்பகல் 3 மணிக்கு சிறப்பு அபிசேகம் மற்றும் பூசைகள் நடைபெற்று மாலை 5மணிக்கு வசந்த மண்டபப் பூசையுடன் சுவாமி வீதிவலம் வருதல் இடம்பெறும் என்று ஆலயத்தினர் அறிவித்துள்ளனர். (ஐ-17)

# சீனாவும், இந்தியாவும் எங்களுக்கு முக்கியம்

## தமிழர் விவகாரம் தொடர்பில் கூட்டமைப்புடன் மோடி பேசுவதால் பயனில்லை என்கிறது ராஜபக்ஷ அரசு



**கொழும்பு, ஒக. 20**

**தமிழர் விவகாரம் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இந்திய மத்திய அரசு பேசியோ அல்லது இந்திய மத்திய அரசுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பேசியோ எந்தப் பயனும் ஏற்படப்போவதில்லை. சீன அரசு, இலங்கை அரசு மீது நம்பிக்கை வைத்துச் செயற்படுகின்றது. இந்திய மத்திய அரசும் அவ்வாறு செயற்படுகின்றது என்றே நம்புகின்றோம். இரு நாடுகளும் இலங்கை அரசுக்கு முக்கியமானவை. இதில் நாம் பிரிவினையை ஏற்படுத்த விரும்பவில்லை.**

இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளரும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

இலங்கையில் சீனாவின் ஆதிக்கம் அதிகரித்து வரும் சூழலில், இலங்கைத் தமிழர் விவகாரத்தை இந்திய மத்திய அரசு கையிலெடுத்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பேச்சுக்கு அழைத்துள்ளமை தொடர்பில் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஒரு நாட்டில் இருக்கும் மக்கள் மீது இன்னொரு நாட்டின் அரசு அக்கறை செலுத்துகின்றது எனில், அந்த மக்களை மட்டும் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்துவதால் எதுவும் நடக்கப் போவதில்லை. அந்த மக்கள் வசிக்கும் நாட்டின் அரசுடன் பேசும்போதுதான் நல்ல கருமங்கள் நடைபெறும்.

அதேபோல்தான் தமிழ் மக்களின் நலனில் இந்திய மத்திய அரசு அக்கறை செலுத்துகின்றது எனில், அவர்களின் பிரதிநிதிகளான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடன் பேச்சு நடத்த முடியாது. இலங்கை அரசுடன்தான் பேச்சு நடத்த வேண்டும்.

அண்மையில் கூட இலங்கை விவகாரம் தொடர்பில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, இலங்கைப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடன் காணொலி ஊடாகப் பேச்சு நடத்தியிருந்தார். இதன்போது நானும் கலந்துகொண்டேன்.

இந்த நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் அவசரப்பட்டு இந்திய மத்திய அரசு எப்போது பேச்சு நடத்தப்போகின்றது? என்ன விடயத்தை இரு தரப்பும் பேசப்போகின்றன? போன்ற கேள்விகள் எழுந்துள்ளன. இந்தக் கேள்விகளுக்கு எம்மால் பதில் தேடவும் முடியாது. அதில் நாம் அக்கறை செலுத்தவும் விரும்பவில்லை. ஏனெனில் இலங்கை அரசை மீறி எதுவும் நடக்கப்போவது இல்லை - என்றார். (ஒ.5.22)

## "ஸ்லிநெக்ஸ்" கூட்டுப் பயிற்சி திருமலையில் நேற்று ஆரம்பம்

திருகோணமலை, ஒக்.20

இந்திய - இலங்கை கடற்படையினரின் மூன்று நாள் கூட்டுப் பயிற்சி திருகோணமலையில் நேற்று ஆரம்பமானது.

இந்தியா மற்றும் இலங்கையின் கடற்படைகள் 'ஸ்லிநெக்ஸ்' என்கிற பெயரில் ஒவ்வொரு ஆண்டும் கூட்டுப் பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றன. அந்த வகையில் இந்த ஆண்டுக்கான 'ஸ்லிநெக்ஸ்' இருதரப்புக் கூட்டுப் பயிற்சி திருகோணமலையில் நேற்று ஆரம்பமானது. 3 நாள்களுக்கு இந்தப் பயிற்சி நடைபெறவுள்ளது.

பயிற்சியில் இந்தியக் கடற்படை சார்பில் நீர்மூழ்கிக் கப்பல்களை அழிக்கும் ஐ.என்.எஸ். கமோர்தா, ஐ.என்.எஸ். கில்டன் ஆகிய போர்க்கப்பல்கள் கலந்துகொள்கின்றன. இவைதவிர, இந்தியப் போர்க் கப்பல்களில் இருக்கும் நவீன இலகு ரக ஹெலிகொப்டர்கள் மற்றும் சேத்தக் ரக ஹெலிகொப்டர்கள், கடற்படையின் டோர்னியர் ரோந்து விமானம் ஆகியவையும் இந்தக் கூட்டுப் பயிற்சியில் பங்கேற்கின்றன.

அதேபோல் இலங்கை கடற்படைசார்பில் எஸ்.எல்.என். சயூரா என்ற ரோந்துக் கப்பலும் கஜபாகு என்ற பயிற்சிக் கப்பலும் கலந்து கொள்கின்றன. (ப-இ)

## கட்டாக்காலி கால்நடைகளை கட்டுப்படுத்தக் கோரிக்கை

கிளிநொச்சி,ஒக்.20

கிளிநொச்சி மாவட்டத்தில் பொரும்போகச் செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், கட்டாக்காலி கால்நடைகளின் தொல்லைகளும் அதிகரித்துள்ளன.

தற்போது வறட்சியில் இருந்து பயிர்களைக் காப்பதற்கு விவசாயிகள் போராடி வரும் நிலையில், கால்நடைகள் வயல்களுக்குள் புகுந்து நாசம் செய்து வருகின்றன.

எனவே கால்நடைகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கால்நடைகளைக் கட்டுப்படுத்துமாறு, புளியம்பொக்கணை கமநலசேவை நிலையத்தில் முறையிட்டும், நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர். (க- 113)



## சாரதிகள் பரீட்சை மைதானம் திறப்பு

முல்லைத்தீவு,ஒக்.20

முல்லைத்தீவு மாவட்டத்தில் மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தின் செயன்முறைப் பரீட்சை மைதானம், மாங்குளம் வீதியில் நேற்றுத் திறக்கப்பட்டது.

சாரதிகளுக்கான செயன்முறை பரீட்சை மைதானத்துக்கு இடம் ஒதுக்கப்பட்ட போதும், அது சரியான முறையில் இல்லாத காரணத்தால், முல்லைத்தீவு மாவட்ட 59 ஆவது படைப்பிரிவின் ஏற்பாட்டிலும், அவலோன் தனியார் நிறுவனத்தின் ஒத்துழைப்பிலும் சாரதிகள் செயன்முறை பரீட்சை மைதானம் அமைக்கப்பட்டது.

59 ஆவது படைப்பிரிவின் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் பெரேரா மைதானத்தைப் பாவனைக்குத் திறந்தார்.

நிகழ்வில் மாவட்டச் செயலர் க.விமலநாதன் மற்றும் மாவட்ட முதன்மைச் சாரதிப் பரீட்சை அதிகாரிகள் மற்றும் படை அதிகாரிகள், சாரதிப் பயிற்சி கல்லூரி இயக்குநர்கள், அவலோன் நிறுவனத்தின் இணைப்பாளர் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர். (க-19)

## விண்ணப்பம்கோரல்

யாழ்ப்பாணம்,ஒக்.20

தென்மராட்சி பிரதேச கலாசார மத்திய நிலையத்துக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. புத்தசாசனம், சமயம் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சானது, பிரதேச கலாசார மத்திய நிலையங்களில் மூலமாக கலை,மொழி சார்ந்த வகுப்புக்களை வருடந்தோறும் நடத்தி வருகின்றது.

இதற்கமைவாக தென்மராட்சி பிரதேச கலாசார மத்திய நிலையம் 2021 ஆம் ஆண்டுக்கான இசை,நடனம்,சித்திரம்,நாடகம்,ஆங்கிலம், சிங்களம் ஆகிய வகுப்புக்களை நடாத்தவுள்ளது. இதற்கான ஆசிரியர்களை நியமிப்பதற்கு தகுதி வாய்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரிகள் தமது கல்வி, கலைசார் தகைமைகள், தொலைபேசி இலக்கம் அடங்கிய விண்ணப்பத்தை எதிர்வரும் நவம்பர் மாதம் 6 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடிய வாறு, நிலையப் பொறுப்பதிகாரி, கலாசார மத்திய நிலையம், தென்மராட்சி,குடமியன்,வரணி எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

⅄ ⅄ ⅄

புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் கீழ், தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவின் அளவெட்டிப் பகுதியில் அமைத்திருக்கும் கலாசார மத்திய நிலையம் மற்றும் நிலையங்களில் குறிப்பிடப்பட்ட பாட நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

கர்நாடக சங்கீதம்,பரதநாட்டியம்,சித்திரமும் வடிவமைப்பும், நாடகமும் அரங்கியலும், சிங்களமொழி, ஆங்கிலமொழி மற்றும் இசை வாத்தியக் கருவிகள் ஆகிய பாடநெறிகளை நடத்துவதற்கான நடவடிக்கைகளை அமைச்சு மேற்கொண்டுள்ளது.

குறிப்பிட்ட பாடநெறிகளைக் கற்பிக்க ஆர்வமுடைய தெல்லிப்பழை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட வளவாளர்கள், தங்களது சுய விவரங்களை எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் நிலையப் பொறுப்பதிகாரி, கலாசார மத்திய நிலையம், அளவெட்டி தெற்கு, அளவெட்டி என்ற முகவரிக்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்புமாறு கேட்கப்பட்டுள்ளது.

⅄ ⅄ ⅄

புத்தசாசனம், மதம் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் சுற்றுநிருபத்துக்கு அமைவாக, வலிகாமம் மேற்கு சங்கானை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கலாசார மத்திய நிலையத்தில் 2021 ஆம் ஆண்டுக்கான பாடநெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

அந்தப் பாடநெறிகளைக் கற்பிப்பதற்கான வளவாளர்களை இணைத்துக்கொள்வதற்கான நேர்முகத் தேர்வு நடைபெறவுள்ளது.

ஆர்வமுள்ளவர்கள் தங்களது சுயவிவரக் கோவையை எதிர்வரும் நவம்பர் மாதம் 4 ஆம் திகதிக்கு முன்னதாக கலாசார மத்திய நிலையம் சங்கானை என்ற முகவரிக்கு தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ ஒப்படைக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

⅄ ⅄ ⅄

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தால் முகா மைத்துவப் பட்டக்கற்கை நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பிக்க விரும்புவோர் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் ஏதாவது ஒரு துறையில் ஒரே தடவையில் 3 பாடங்களிலும் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

இந்தக் கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரிகள் www.ou.ac.lk என்ற இணையத்தள முகவரி ஊடாக எதிர்வரும் நவம்பர் மாதம் 10 ஆம் திகதி முன்னதாக விண்ணப்பிக்க முடியும். மேலதிக விபரங்களை அறிய பிராந்திய நிலையத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (க-இ)

# கல்லறைகள் இங்கே நீதி எங்கே?




■ ஆவுடையாள்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் சுலக்சனும் கஜனும் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியாகி இன்றுடன் 4 ஆண்டுகள் ஓடி மறைகின்றன. அவர்கள் கொல்லப்பட்டார்கள் என்று அறிந்த அந்தக் கணத்தில் இருந்த கோபமோ, ஆவேசமோ, கொந்தளிப்போ இன்று மாணவர்கள் மத்தியில் இல்லை. அன்று நீதி கேட்டு எந்த எல்லைக்கும் போவோம் என்ற மனநிலையில் இருந்தவர்கள் எத்தனை பேருக்கு சுலக்சன் கஜன் படுகொலை செய்யப்பட்டது இந்த நாளில்தான் என்று நினைவிருக்குமோ தெரியவில்லை. பேஸ்புக் தனது நினைவுகளைப் பகிரும் போது நாங்களும் மனதில் எங்கோ ஓர் ஓரத்தில் சிறிய வருத்தத்துடன் அந்தத் துயரக் கணங்களை நினைந்துருகியவர்களாக 'இதுவும் கடந்து போகும்' என்ற மனநிலையில் விடயத்தைக் கடக்கின்றோம்.



**சம்பவமும் பதிவுகளும்**

அரசறிவியல் துறை மாணவன் நடராஜா கஜன் மற்றும் ஊடகக்கற்கைகள் துறை மாணவன் விஜயகுமார் சுலக்சன் ஆகிய இரு மாணவர்களும் 2016ஆண்டு ஒக்ரோபர் மாதம் 20 ஆம் திகதி நள்ளிரவு கொக்குவில் குளப்பிட்டி பகுதியில் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோது பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்தனர்.

இந்தச் சம்பவத்தை ஒரு விபத்தாக வெளிப்படுத்த பொலிஸார் கடும் பிரயத்தனம் எடுத்தபோதும், உடல்கூற்றுப் பரிசோதனையில் நடந்தது விபத்து அல்ல படுகொலை என்பது வெளிச்சத்துக்கு வந்தது. இதையடுத்து ஒக்டோபர் 22ஆம் திகதி சம்பவம் தொடர்பில் யாழ். பொலிஸ் நிலையத்தை சேர்ந்த ஐந்து பொலிஸார் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். 11 மாதங்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்ட நிலையில் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றால் ஐவரும் பிணையில் விடுவிக்கப்பட்டதுடன் பொலிஸ் சேவையில் மீளவும் இணைக்கப்பட்டனர். பின்னர், வழக்கில் சந்தேகநபர்களாக குறிப்பிடப்பட்டி ருந்த 5 சந்தேகநபர்களில் இரண்டாவது சந்தேகநபர் ஏக்கநாயக்க முதியான்சலாகே ஜயவர்த்தன, நான்காவது சந்தேகநபர் தங்கராஜன் லங்காமனன், ஐந்தாவது சந்தேகநபர் கமல விதானகே நவரத்ன பண்டார ஆகியோர் வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டு அரச சாட்சிகளாக மாற்றப்பட்டனர். மேலும் கடமைக்கு பொறுப்பாகவிருந்தவரான முதலாவது சந்தேகநபர் சரத் பண்டார திசாநாயக்க மற்றும் சூடு நடத்தியவரான மூன்றாவது சந்தேகநபர் சமர ஆராய்சிலாகே சந்தன குமார சமர ஆராச்சி ஆகிய இருவருக்கும் எதிராக இலங்கை குற்றவியல் நடைமுறை சட்டக்கோவையின் 296ஆம் பிரிவின் கீழான கொலைக் குற்றச்சாட்டின் கீழ் பிராது பத்திரத்தை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றில் தாக்கல் செய்திருந்தனர். அதனடிப்படையில் சிவில், பொலிஸ் மற்றும் நிபுணத்துவ சாட்சியங்கள் கடந்த 2019ஆம் ஆண்டு ஜூன் 13ஆம் திகதி நிறைவடைந்து சுருக்கமுறையற்ற விசாரணையின் கட்டளைக்காக 2019ஆம் ஆண்டு ஜூன் 27ஆம் திகதி வழக்கு தவணையிடப்பட்டிருந்தது.

அன்றையதினம் இடம்பெற்ற வழக்கில் 'சந்தேகநபர் இருவருக்கும் எதிராக தாக்கல்செய்யப்பட்ட குற்றச்சாட்டுப் பத்திரங்களின் மீது வைக்கப்பட்ட சான்றாதாரங்களின் மீது மன்று திருப்தியடைகின்றது. அதனால் அவர்கள் இருவருக்கும் எதிராக மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய மன்று கட்டளையிடுகின்றது. அதற்காக சுருக்கமுறையற்ற விசாரணைகளின் வழக்கு ஆவணங்களைச் சட்டமா அதிபருக்கு பாரப்படுத்த மன்று பணிக்கின்றது. சந்தேக நபர்கள் இருவரும் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட பிணையில் விடுவிக்கப்படுகின்றனர் என யாழ்ப்பாணம் நீதவான் அ.பீற்றர் போல் கட்டளை வழங்கினார்.

இதன் பின்னர் 2020ஆம் ஆண்டு ஜனவரி 20ஆம் திகதி வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு கொழும்பு குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திடம் விசாரணைகள் பாரப்படுத்தப்பட்டுள்ளன எனத் தெரியவருகின்றது. தற்போதுள்ள கொரோனாப் பரவல் காரணமாகவும், சுலக்சன் மற்றும் கஜனது குடும்பத்தினர் கொழும்பில் விசாரணைகளுக்காகச் சென்றுவருவதில் உள்ள இடர்பாடுகள் காரணமாகவும் வழக்கு விசாணைகள் இழுத்தடிக்கப்பட்டு வருகின்றன.

**பக்குவப்படாத நகர்வுகளால் பயன் ஒன்றும் இல்லையே**

ஒரு சமூகத்தின் உயர்கல்விப் பீடத்தின் மீது அரங்கேறிய இந்த வன்முறையை பல்கலைக்கழக மாணவர் சமூகம் எவ்வாறு கையாண்டுள்ளது என்பதை நோக்கும்போது அவர்கள் வழமைபோன்று உணர்ச்சித் தளத்திலிருந்தே இதனை அணுகியிருந்தனர். எதற்கும் எடுத்தோம் கவிழ்த்தோம் என்ற பாணியில் அதிரடியாக போராட்டங்களை முன்னெடுத்தனர். ஏ9 வீதியை மறித்தனர், பல்கலைக் கழகத்தை முடக்கினர், அரசியல்வாதிகளை புறக்கணித்தனர், ஒரு கட்டத்தில் ஊடகங்களையும் கூட இந்த விடயத்தில் புறக்கணித்தனர். இவ்வாறு வெறுமனே உணர்ச்சியின் அடிப்படையில் மட்டும் இந்த விடயத்தை அணுகிய அவர்களால் ஆக்கபூர்வமாக அடுத்தடுத்த கட்டங்களுக்கு நகரமுடியவில்லை.

போராட்டங்களைக் கைவிட நேர்ந்தமைக்கு வெளியிலிருந்து வந்த அழுத்தங்கள், அச்சுறுத்தல்களும் ஒரு காரணமெனச் சொல்லப்பட்டது. சுலக்சன், மற்றும் கஜனது நினைவுதினங்களில் அவர்களுக்கு விரிவுரையாளர்களால் பலவிதமான ஆலோசனைகள் வழங்கப்பட்டன. அதில் ஒன்று, குறைந்தபட்சம் வழக்கு விசாரணைகளின்போது மாணவர் தரப்பிலிருந்து சிலராவது நீதிமன்றத்துக்குச் சென்று தாங்கள் இன்னமும் இந்த விடயத்தில் கரிசனையாக இருக்கின்றோம் என்பதை வெளிப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டது. ஆனாலும் அதைக்கூட செய்யத் திராணியற்ற நிலையில் மாணவர் சமூகம் உள்ளது. சுலக்சன், மற்றும் கஜனது குடும்பப் பின்னணி யாவரும் அறிந்தது. எந்தவித பக்கபலமும் இல்லாமல் இந்த விடயத்தில் எந்த அழுத்தத்தையும் வழங்க முடியாத நிலையில் அவர்கள் உள்ளனர். நான்கு ஆண்டுகளாகத் தாமதிக்கப்படும் நீதியால் மிகுந்த மன உளைச்சலுக்கும் அதிருப்திக்கும் அவர்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

**எதிர்பார்ப்பு**

நினைவு தினங்கள் தவிர்க்கப்பட முடியாதவைதான். ஆனால் அந்த நினைவுதினங்களை சம்பிரதாயமாகக் கடைப்பிடித்துவிட்டுப் போவதால் எவருக்கும் எந்தப் பயனும் இல்லை. சுலக்சன், மற்றும் கஜன் இருவரினதும் ஒளிப்படங்களை தூசுதட்டி அவற்றுக்கு முன்னால் மெழுகுவர்த்திகளை ஏற்றிவிட்டு நகர்வதால் தம் கடமை முடிந்துவிட்டது என்று எண்ணும் மனோநிலையை கல்விச் சமூகம் கைவிட வேண்டும். இந்தப் படுகொலைக்கு நீதிதேடும் அடுத்தகட்ட நகர்வுக்கு அவர்கள் செல்ல வேண்டும். நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் இடம்பெற்ற விடயம்தானே என இன்றைய மாணவர் சமூகம் சிந்தித்தல் ஆகாது. தாம் சார்ந்த சமூகத்தின்மீது பார்வையைச் செலுத்தியபடி சுலக்சன் மற்றும் கஜன் இருவரினதும் கல்லறைகள் உறங்கிக்கொண்டிருக்கின்றன.



20 ஆவது திருத்தச் சட்டம்:

# பந்துலவின் கருத்தால் கூட்டம் ஒத்திவைப்பு

கொழும்பு, ஒக்.20

அரசமைப்பின் 20 ஆவது திருத்தச் சட்டவரைவு தொடர்பாக நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்கும் கட்சித் தலைவர்களுக்கும் இடையில் முக்கிய கலந்துரையாடல் நேற்று நடைபெற்றது.

இதில் அமைச்சர் பந்துல குணவர்தன, தெரிவித்த கருத்தையடுத்து கூட்டத்தில் பதற்றம் ஏற்பட்டதுடன், அந்தக் கலந்துரையாடல் இடைநடுவில் கைவிடப்பட்டது.

பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்திலேயே இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலுக்கு, அமைச்சர் பந்துல குணவர்தன தாமதமாக வருகைதந்தார். இடை நடுவில் வந்தமைக்கான காரணத்தை, பந்துலவிடம் ஏனையோர் வினவினர், “பி.சி.ஆர் பரிசோதனையைச் செய்து கொண்டேன், ஆனால், இன்னும் அறிக்கை கிடைக்கவில்லை” எனத் தெரிவித்தார்.

இதனால், கலந்துரையாடலில் ஒருவகையான பதற்ற நிலைமை ஏற்பட்டது. இதையடுத்து, கலந்துரையாடல் ஒத்திவைக்கப்பட்டது. (ற-இ)

# உள்ளூராட்சி சபைகளுக்கு புதிய மகுட வாசகம்

**கொழும்பு, ஒக்.20**

**பொதுமக்களின் கோரிக்கைக்கு அமைவாக உள்ளூராட்சி சபைகளுக்கு புதிய மகுட வாசகம் அமைக்கப்படவுள்ளது.**

நாட்டிலுள்ள பல உள்ளூராட்சி சபைகள் மகுட வாசகம் இன்றிச் செயற்பட்டு வருவதை அவதானித்த உள்ளூராட்சி மன்றங்களின் ஒன்றியத்தினர், அந்தந்த உள்ளூராட்சி சபைக்கு பொருத்தமான மகுட வாசகம் ஒன்றை தெரிவு செய்யுமாறு பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்தனர்.

இந்தக் காலப்பகுதியில் பெருமளவு மக்கள் தமது உள்ளூராட்சி சபைகளுக்கான மகுட வாசகத்தைத் தெரிவு செய்து அனுப்பியிருந்தனர்.

இதன் பிரகாரம் மக்களால் அதிக அளவில் தெரிவு செய்யப்பட்ட வாசகங்கள் சபையின் மகுட வாசகமாக அமைக்கப்படவுள்ளது என்று அறிவித்திருந்தனர். தற்போது உள்ளூராட்சி சபைகளின் ஒன்றியத்தால் விடுக்கப்பட்ட ஐந்து வாசகங்களில் “நிறைவான சேவையில் வளமான நகரம்” என்னும் வாசகம் அதிகளவானோரால் விரும்பப்பட் டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள் ளது.

இந்த வாசகம் அண்மையில் நடைபெற்ற சபை அமர்வில் ஏற்றுக் கொள்ளப்பட்டு அனுப்பப்ப்ட்டுள்ளது. (ற-9)

# 11 பள்ளிவாசல்கள் தற்காலிகமாக பூட்டு

கொழும்பு, ஒக்.20

இலங்கையில் கொரோனாப் பரவலைத் தடுப்பதற்காக, நீர்கொழும்பு பிரதேசத்திலுள்ள 11 பள்ளிவாசல்களைத் தற்காலிகமாக மூடுவதற்கு நிர்வாகத்தினர் தீர்மானித்துள்ளனர்.

இதற்கமைய, நீர்கொழும்பு பெரியமுல்லை பெரிய பள்ளிவாசல் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் பத்து பள்ளிவாசல்கள் மற்றும் நீர்கொழும்பு நகர மத்தியில் சாந்த பீற்றர் கல்லூரிக்கு முன்பாகவுள்ள பள்ளிவாசல் அடங்கலாக 11 பள்ளிவாசல்களை கொரோனா அச்சுறுத்தல் காரணமாக தற்காலிகமாக மூடுவதற்கு பள்ளிவாசல் நிர்வாகத்தினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதனால் பொதுமக்கள் ஐந்து வேளை தொழுகைக்கு பள்ளிவாசல் வருவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. (ற-இ)

# சங்கானை மீன் சந்தைக்கு வெள்ளிக்கிழமைகளில் பூட்டு

சங்கானை,ஒக்.20

வலிகாமம் மேற்கு சுழிபுரம் பிரதேச சபையின் ஆளுகைக்கு உட்பட்ட, சங்கானை மீன் சந்தையை வெள்ளிக்கிழமைகளில் மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பிரதேச சபைத் தவிசாளர் த.நடனேந்திரன் தெரிவித்துள்ளார்.


சங்கானை மீன் சந்தையில் மதுபாவனையில் ஈடுபடுபவர்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில், இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அண்மைய நாள்களாக சங்கானை சந்தையில் வெள்ளிக்கிழமைகளில் மதுபாவனையில் சிலர் ஈடுபடுகின்றனர் என்று மக்களால் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டது. அதனையடுத்து அதிகாரிகள் மீன் சந்தைக்கு நேரில் சென்று மதுபாவனையில் ஈடுபடுவதை உறுதிப்படுத்தினர்.இதனையடுத்து இந்த நட வடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தவிசாளர் தெரிவித்துள்ளார்.(க-20)

# கொழும்பு தேசிய மருத்துவமனையின் மூன்று விடுதிகள் இழுத்து மூடப்பட்டன

கொழும்பு, ஒக்.20

கொழும்பு தேசிய மருத்துவமனையின் மூன்று நோயாளிகள் விடுதிகளுக்கு நோயாளிகளை இணைத்துக்கொள்வது தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

34ஆம், 35ஆம் மற்றும் 36ஆம் இலக்க அறைகளே இவ்வாறு மூடப்பட்டுள்ளன எனத் தெரியவருகிறது.ஜா -எலவைச் சேர்ந்த ஒருவர் இதய அறுவை சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதையடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (வ-இ)



# திருமலையில் ஆண் ஒருவரின் சடலம் மீட்பு

திருகோணமலை, ஒக்.20

திருகோணமலை அலஸ்தோட்டம் கடற்கரையோரத்தில் ஆண் ஒருவரின் சடலம் நேற்று அதிகாலை மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் பள்ளத்தோட்டம் பகுதியில் தனிமையாக வாழ்ந்து வந்த 46 வயதுடையவர் என்று பொலிஸ் விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் என்றும் உப்புவெளிப் பொலிஸார் தெரிவித்தனர்.(ற-இ)



# பட்டா ரக வாகனம் நேற்று விபத்து

கிளிநொச்சி, ஒக்.20

கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயத்துக்கு அருகில் பட்டா ரக வாகனமொன்று நேற்று அதிகாலை விபத்துக்குள்ளாகியுள்ளது. இந்த வாகனம் வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி அருகிலிருந்த மதகு கட்டை உடைத்து விபத்துக்குள்ளானது. கெக்கிராவ பகுதியிலிருந்து அறுநூறு இறைச்சிக் கோழிகளை ஏற்றிக் கொண்டு, யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த நிலையிலேயே இந்த வாகனம் விபத்துக்குள்ளாகியுள்ளது.

வாகனத்தைச் செலுத்தி வந்த சாரதியின் தூக்கக்கலக்கமே இந்த விபத்துக்கான காரணம் என்று தெரியவருகின்றது. இது தொடர்பில் கிளிநொச்சி போக்குவரத்துப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற-ரி1)

# இனங்களுக்கிடையில் குரோதத்தை ஏற்படுத்திய பெண் கைது



கொழும்பு, ஒக்.20

இனங்களுக்கிடையில் குரோதத்தை ஏற்படுத்தும் விதமாக சமூக ஊடகங்களில் கருத்துத் தெரிவித்த பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார். இந்தப் பெண் சமூக ஊடகங்களில் காணொலி ஒன்றை வெளியிட்டு இனங்களுக்கிடையில் குரோதத்தை ஏற்படுத்தும் விதமாக கருத்துக்களைத் தெரிவித்து வந்தமையால் குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் பத்தரமுல்லைப் பகுதியில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார். (ற-இ)

# எட்டு வீடுகளில் மோட்டர்கள் களவு

யாழ்ப்பாணம், ஒக்.20

யாழ்.கொக்குவில் கிழக்கு பகுதியில் கடந்த ஒரு மாதத்துக்குள் 8 வீடுகளில் தண்ணீர் இறைக்கும் மின்சார மோட்டர்கள் திருட்டுப் போயுள்ளன என்று மக்கள் தெரிவிக்கின்றனர்.

கொக்குவில் சபாபதி ஒழுங்கை, பழைய தபால் கந்தோர் ஒழுங்கை, அச்சுக்கூட ஒழுங்கை, தலையாளி போன்ற பகுதிகளிலுள்ள வீடுகளிலேயே இந்தத் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. திருட்டுச் சம்பவங்களில் ஈடுபடுபவர்கள் அந்த இடங்களிலே இருக்கின்றனர் என்றும் இரவு நேரங்களில் நடமாடுகின்றமை சி.சி.ரி.வி கமெராவில் பதிவு செய்யப்பட்டுள்ளன என்றும் மக்கள் தெரிவித்தனர். இது தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்தும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று அந்தப் பகுதி மக்கள் கவலை தெரி விக்கின்றனர்.

வீடுகளில் இறங்கும் திருடர்கள் கைக்கு அகப்படும் இலத்திரனியல் பொருள்கள் உட்பட வாழைக்குலை, அம்மி என்று ஒன்றையும் விட்டு வைப்பதில்லை என்று மக்கள் மேலும் தெரிவிக்கின்றனர். (ற-20)



## இன்றைய நாள்

**மேடம்:** பணிச்சுமை அதிகரிக்கும். பேச்சில் நிதானம் தேவைப்படும் நாள். குடும்பத்தாரின் ஆதரவு பெருகும். சொத்து பிரச்சினை முடிவுக்கு வரும். வெளிவட்டாரத்தில் அந்தஸ்து உயரும். முயற்சி நிறைவேறும்.

**இடபம்:** முக்கியமான முடிவுகளை எடுக்கும்போது கவனம் தேவை. பொதுநல விஷயத்தில் ஈடுபட்டுப் பாராட்டுப் பெறுவீர்கள். வெளியூரிலிருந்து நல்ல செய்தி வரும்.

**மிதுனம்:** அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள். நினைத்ததை முடிப்பீர்கள். பெண்கள் மகிழ்ச்சியாக இருப்பர். விருந்தினர் வருகை அதிகரிப்பால் கவனமாக இருங்கள்.

**கடகம்:** உங்கள் பெரிய முயற்சிகள் நிறைவேற உதவிகள் கிடைக்கும். முன்பு ஏற்பட்ட இழப்புகளை சரி செய்வீர்கள். மகிழ்ச்சியான நாள். மன நிறைவு அதிகரிக்கும். பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**சிம்மம்:** வாய்ப்புகளைப் சரியாக பயன்படுத்தாமல் விட்டதற்கு வருந்துவீர்கள். தன்னம்பிக்கை குறையாதபடி கவனமாக இருங்கள். பணவரவு உண்டு. நிம்மதி உண்டு.

**கன்னி:** வியாபாரத்தில் புது யுக்திகளை கையாண்டு வெல்வீர்கள். சிக்கல்கள் தீரும். வீடு வாங்கும் எண்ணம் நிறைவேறும் மகிழ்ச்சி நிலைக்கும். வேற்று மதத்தவர்களால் நன்மை உண்டு.

**துலாம்:** தொட்டது துலங்கும் நாள். பணியாளர்கள் வழக்கத்துக்கு அதிகமாக உழைப்பீர்கள். குடும்பத்தினருடன் மகிழ்ச்சியாக நேரம் செலவழிப்பீர்கள்.

**விருச்சிகம்:** மாற்றங்கள் செய்து லாபம் அடைவீர்கள். சுற்றியிருப்பவர்களில் நல்லவர்கள் யார் என்பதை கண்டறிவீர்கள். உறவினர்களால் முன்பு ஏற்பட்டிருந்த தொல்லைகள் குறையும்.

**தனுசு:** குடும்பம் மகிழும். பணியாளர்களுக்கு புது சலுகைகள் கிடைக்கும். வியாபாரத்தில் இழப்புகள் ஏற்படும். பொறுமைத் தேவைப்படும் நாள்.

**மகரம்:** பழைய பிரச்சினைக்கு தீர்வு கண்டு நிம்மதி அடைவீர்கள். புதிய நட்பால் உற்சாகமடைவீர்கள். நல்லன நடக்கும் நாள். வியாபாரத்தில் புதிய தொடர்பு கிடைப்பதால் திருப்பம் ஏற்படும்.

**கும்பம்:** நெருங்கியவருக்காகக் கொள்கையை மாற்றிக் கொள்வீர்கள். சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். தடைகளை கண்டு தளரமாட்டீர்கள்.

**மீனம்:** பணியாளர்கள் பழைய பிரச்சினைக்கு தீர்வு காண்பீர்கள். வீட்டுக்குத் தேவையான பொருள்களை வாங்குவீர்கள். உங்களின் முயற்சிகள் நிறைவேற நல்லவர்கள் உதவுவர்.

# விவசாயிகளின் நலன் கருதி திறக்கப்பட்டது இரணைமடு

**கிளிநொச்சி, ஒக். 20**
**காலபோக நெற் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகளுக்கு இதுவரை உரிய மழை கிடைக்காததால், கிளிநொச்சி, இரணைமடுக் குளத்தின் 1 அடி நீர் விவசாய நடவடிக்கைக்காக திறந்துவிடப்பட்டுள்ளது.**



கிளிநொச்சியில், காலபோக நெற் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளின் நெல், பயிராகியுள்ள நிலையில் பருவமழை இல்லாததால் அவை கருகத்தொடங்கின. மறுவிதைப்புக்கு விதைநெல் வாங்குவதற்கு முடியாதநிலையில் விவசாயிகள் மிகவும் சிரமங்களை எதிர்கொண்டனர். எஞ்சிய பயிர்களைக் காப்பாற்றுவதற்கு இன்னும் இரணைமடுக் குளத்து நீர் திறந்து விடப்படவில்லை என அவர்கள் கவலை தெரிவித்திருந்தனர். இவ்வாறான நிலையில் நேற்று பகல் பூசை வழிபாடுகளுடன் நீர்ப்பாசனத் திணைக்களத்தால் இரணைமடுக் குளத்தின் ஒரு அடி நீர் திறந்துவிடப்பட்டது. (ப-6,222,ரி1)

# ஒன்றுகூடலை தவிர்க்கவும்

## சுகாதாரப் பிரிவு கோரிக்கை

கொழும்பு,ஒக்.20
தற்போது ஏற்பட்டிருக்கும் கொரோனா அச்சுறுத்தல் காரணமாக, தேவையற்ற ஒன்றுகூடலைத் தவிர்த்துக்கொள்ளுமாறு பொதுமக்களிடம் சுகாதாரப் பிரிவினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.
அத்துடன் அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு அத்தியாவசிய சேவைகளுக்கு மாத்திரம் செல்லுமாறும் சுகாதாரத் துறையினர், பொதுமக்களிடம் கேட்டுள்ளனர்.
நாட்டில் தற்போது கொரோனா வைரஸ் பரவி வருவதால், நபர்கள் ஒன்றுகூடும் இடங்களுக்குச் செல்வதை முடிந்தவரையில் குறைத்துக் கொள்ளவும் என்று சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் விசேட மருத்துவ நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார். மறு அறிவித்தல் விடுக்கும் வரை அரச நிறுவனங்களில் பொதுமக்கள் தினத்தை நடத்த வேண்டாம் எனவும் அவர் அறிவித்துள்ளார். (க-இ)



கிளிநொச்சி இந்துக் கல்லூரியில், நவராத்திரி பூசை கும்பவைப்பு வழிபாடுகள் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றன. (க-159)

## கைதிகளை பூசா சிறைக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை

கொழும்பு, ஒக்.20
சமுதாயத்துக்கு அச்சுறுத்தலாக இருக்கும் கைதிகளை பிரித்தெடுத்து பூசா உயர் பாதுகாப்பு சிறைச்சாலைக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று சிறைச்சாலைகள் ஆணையாளர் துஷார உப்புல்தெனிய தெரிவித்துள்ளார். பூஸா சிறைச்சாலையை உயர் பாதுகாப்பு சிறைச்சாலையாக பிரகடனப்படுத்தும் நிகழ்வின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.
சிறைச்சாலைகள் ஊடாக சமுதாயத்துக்கு அச்சுறுத்தல் ஏற்படாத வண்ணம் விசேட கவனம் செலுத்துவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-இ)

## உயர்தர மாணவர்களுக்கு பொலிஸாரின் அறிவிப்பு

கொழும்பு,ஒக்.20
தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ள பகுதிகளைச் சேர்ந்த உயர்தர மாணவர்களுக்கு, தனிமைப்படுத்தல் மற்றும் ஊரடங்குச் சட்டம் பாதிப்பை ஏற்படுத்தாது.
எனவே மாணவர்கள் வீண் குழப்பமடைய வேண்டாம் என்று பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண அறிவுறுத்தியுள்ளார். மாணவர்கள் சுகாதார நடைமுறைகளுக்கு ஏற்ப பரீட்சைகளில் கலந்து கொள்ள முடியும்.
முகக்கவசம் அணிதல் மற்றும் தனிநபர் இடைவெளியைக் கடைபிடித்தல் தொடர்பில் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுள்ளார். (க-இ)

# சுகாதாரப் பாதுகாப்பில்லையெனில் 1988 இலக்கத்துக்கு அழைக்கவும்

கொழும்பு,ஒக்.20
பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் சுகாதார நலனை உறுதிப்படுத்தாத வகையில் செயற்படுதல் அல்லது தேவையான சுகாதார வசதிகள் கிடைக்காவிடின், உடனடியாக கல்வி அமைச்சின் துரித தொலைபேசி இலக்கமான 1988 என்ற இலக்கத்துக்கு அழைக்குமாறு கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.
கொரோனா பரவலால் நாட்டில் ஏற்பட்டுள்ள ஆபத்து நிலைமையைக் கவனத்தில் கொண்டு, சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் போக்குவரத்துப் பிரிவுகளிடமிருந்து பூரண ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ளலாம். பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் பாதுகாப்புடன் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான சந்தர்ப்பங்கள் உருவாக்கப்பட்டுள்ளன என்றும் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. (க-இ)

# சட்டம் இயற்றும் சபையே விதிமுறையை மீறலாமா?

## '20'மீதான விவாதத்தை பிற்போடுமாறுகோரி சபாநாயகருக்கு எதிரணி அவசரக் கடிதம்

கொழும்பு, ஒக். 20

**அரசமைப்பின் 20ஆவது திருத்தம் மீதான விவாதத்தை ஒத்திவைக்குமாறு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவிடம், பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி கோரிக்கை விடுத்துள்ளது. இதற்கான காரணங்களை தெளிவுபடுத்தி எதிரணி பிரதம கொறடா லக்ஷ்மன் கிரி.யெல்லவால் சபாநாயகருக்கு நேற்று கடிதமொன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.**

சுகாதார அமைச்சால் வெளியிடப்பட்டுள்ள புதிய வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் நாடாளுமன்ற அமர்வை நடத்த முடியாத நிலை உள்ளதாகவும், அவ்வாறு நடத்தினால் அது சுகாதார விதிமுறைகளை மீறியதாக அமையும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

'நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அரசின் அலட்சியம் காரணமாக தொற்று வேகமாகப் பரவிவருவதைக் காணமுடிகின்றது. வைரஸ் தொற்றுநோயைக் கட்டுப்படுத்தத் தேவையான சட்டவிதிமுறைகளை கொண்டுவருவதற்கு சுமார் 10 மாதங்கள் எடுத்துள்ளன.

புதிய வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் கூட்டங்கள் மட்டுப்படுத்தப்பட வேண்டும் என்பதுடன் சமூக இடைவெளியும் கட்டாயம் கடைபிடிக்கப்பட வேண்டும். எனினும், நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமரும் இருக்கைகளுக்கிடையில் போதியளவு சமூக இடைவெளி இல்லை, அப்படியானால் அது புதிய வர்த்தமானியின் விதிமுறையை மீறுவதாக அமையும்.

கூட்டங்கள் மட்டுப்படுத்தப்பட்டுள்ள நிலையில், நாடாளுமன்றத்தைக்கூட்டுவதும் பொருத்தமற்ற நடவடிக்கையாகவே அமையும். எனவே, சட்டம் இயற்றும் சபையே சட்டத்தைமீறி தவறான முன்னுதாரணத்தை வழங்கும் வகையில் செயற்படக்கூடாது. எனவே, 20 மீதான விவாதத்தை ஒத்திவைக்குமாறு கோருகின்றோம். மேற்படி விவகாரம் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு சந்தர்ப்பம் வழங்குமாறும் வேண்டுகோள் விடுக்கின்றோம். அத்துடன், இவ்வார சபை அமர்வை புதிய வர்த்தமானி அறிவித்தலிலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய நடத்துமாறும்' அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-44)

---

# 20க்கு எதிர்ப்புத் தெரிவித்து வீட்டு மின்விளக்குகளை இன்றிரவு அணையுங்கள்

யாழ்ப்பாணம், ஒக். 20

அரசமைப்பின் 20ஆவது திருத்த சட்டவரவை நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்ப்பு தெரிவித்து இரவு 8 மணிக்கு வீடுகளில் மின்விளக்குகளை அணைத்து மூன்று நிமிடங்களுக்கு ஒளி விளக்கை மாத்திரம் ஏற்றுமாறு ஜனநாயகத்துக்கான ஒன்றிணைந்த இளையோர் அணி வேண்டுகோள் விடுத்துள்ளது.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அந்த அமைப்பின் பிரதிநிதி அ.பெனிஸ்லஸ் துஷான் இவ்வாறு வேண்டுகோள் விடுத்தார். தற்போது கொண்டுவரப்பட்டிருக்கும் 20 ஆவது திருத்தத்துக்கு எதிராக நாங்கள் விழிப்புணர்வு செய்துகொண்டிருக்கின்றோம். இந்த ஜனநாயக விரோதமான 20ஆவது திருத்தம் தொடர்பாக மக்களுக்கு விழிப்பூட்டப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (து-20)

---

# மொத்த விற்பனை நிலையத்தின் 4 பணியாளர்களுக்கு கொரோனா

கொழும்பு, ஒக். 20

கொழும்பு - புறக்கோட்டை 4ஆம் குறுக்குத் தெருவில் உள்ள மொத்த விற்பனை நிலையம் ஒன்றில் பணிபுரியும் 4 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதனையடுத்து குறித்த விற்பனை நிலையம் நேற்றுமுன்தினம் காலை மூடப்பட்டதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர். மேலும் அங்கு பணிபுரியும் ஏனைய ஊழியர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்றும் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர். (ம-இ)

---

# கப்பல்துறை ஊழியர்கள் ஐவருக்கு கொரோனா

கொழும்பு, ஒக்.20

கொழும்பு கடற்படையின் கப்பல் துறை ஊழியர்கள் ஐவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார். கொழும்பு மத்துகம பேருந்தில் பயணித்த கொழும்பு கடற்படை கப்பல் துறை ஊழியர் ஒருவருக்குத் தொற்று உறுதியானது.

இதையடுத்து ஏனைய ஊழியர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி ஆர்.பரிசோதனையில் மேலும் 4 ஊழியர்கள் கொரோனாத் தொற்றா ளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர் என சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

அந்தப் பேருந்தில் பயணித்த கொழும்பு தேசிய வைத்தியசாலையில் பணிபுரியும் தாதி ஒருவருக்கும், பேருந்து ஓட்டுநருக்கும் உதவியாளருக்கும் கொரோனா வைரஸ் தொற்று இருப்பது இதற்கு முன்னர் அடையாளம் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (வ-இ)

---

# முள்ளியவளை மாமூலை பகுதியில் கைக்குண்டு மீட்பு!

முல்லைத்தீவு, ஒக். 20

முள்ளியவளை மாமூலைப் பகுதியில் கைக்குண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளது. அந்தக் கைக்குண்டு போரின்போது கைவிடப்பட்டதாக இருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது. காணியின் உரிமையாளர் முள்ளியவளை பொலிஸ் நிலையத்தில் முறையிட்டதைத் தொடர்ந்து கைக்குண்டு மீட்கப்பட்டது. (ம-19)



---

# பரீட்சை மோசடிகள்: சி.ஐ.டி விசாரணை

கொழும்பு, ஒக்.20

நடைபெற்று வரும் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் மோசடியில் ஈடுபட்ட மாணவர்கள் தொடர்பில் விசாரணைகள் இடம்பெறுகின்றன என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் பீ.சனத் பூஜித் தெரிவித்துள்ளார். குற்றப்புல னாய்வுத் திணைக்களம் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

மோசடிகளைத் தவிர்க்க அனைத்துப் பரீட்சை நிலையங்களுக்கும் மேலதிக உதவி மண்டப தலைமை அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட் டுள்ளார் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (வ-இ)

---

# வவு. மருத்துவமனைக்குள் சமூகப்பரவல் கிடையாது!

வவுனியா, ஒக். 20

வவுனியா வைத்தியசாலையில் கொரோனா சமூகத்தொற்று ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் இல்லை என மருத்துவமனையின் பணிப்பாளர் க.நந்தகுமார் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

பூந்தோட்டம் தனிமைப்படுத்தல் மையத்தில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்கள் உரிய பாதுகாப்பு நடைமுறைகள் பேணப்பட்டே வவுனியா மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்துவரப்பட்டிருந்தனர். அதன்மூலம் சமூகப் பரவல் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் இல்லை.

தொற்றுநீக்கல் செயற்பாட்டிற்காகவே மருத்துவமனை மூடப்பட்டது. ஏனைய சிகிச்சைகள் வழமைபோல நடைபெற்று வருகின்றன.

ஊழியர்கள் பயணிக்கும் மற்றைய வாயில் வழியாக நோயாளர்கள் மற்றும் பொதுமக்கள் உள்ளே அனுமதிக்கப்படுகின்றனர். எனினும் பொதுமக்கள் முன்னெச்சரிக்கையுடன் இருப்பது நல்லது என்றார். (ம-110)

---

# ஆடை ஏற்றுமதி வருமானம் சரிவு

கொழும்பு, ஒக்.20

2020 ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில், இலங்கையின் ஆடை ஏற்றுமதி வருமானம் 22 வீதம் குறைந்து 3.1 பில்லியன் அமெரிக்க டொலராகப் பதிவாகியுள்ளது. கடந்த ஐந்து வருடங்களில் ஜனவரி முதல் செப்ரெம்பர் வரையிலான காலப்பகுதியில் பதிவாகிய மிகக் குறைந்த ஏற்றுமதி வருமானம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது. இதேவேளை, ஆடை ஏற்றுமதியில் 3.9 அமெரிக்க டொலர் என்ற அதிகூடிய வருமானம் கடந்த 2019ஆம் ஆண்டு பதிவாகியிருந்தது. இலங்கையில் இருந்து அமெரிக்காவுக்கான ஆடை ஏற்றுமதியில் 22.15 வீதம் மற்றும் 1.4 பில்லியன் டொலரும், ஐரோப்பிய ஒன்றியத்திற்கான ஏற்றுமதியில் 21.36 வீதம் மற்றும் 1.3 பில்லியன் அமெரிக்க டொலரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இந்த வீழ்ச்சிக்கு உலக நாடுகளில் பரவியுள்ள கொரோனாப் பெருந்தோற்றே பிரதான காரணம் என்பது குறிப்பிடத்தக்கது. (வ-இ)

---

# பொலிஸ் உத்தியோகத்தரின் குடும்பத்தினருக்கு கொரோனா

கொழும்பு, ஒக்.20

கொழும்பு ஆம்பர் வீதியிலுள்ள பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தரின் குடும்ப உறுப்பினர்கள் இருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என ஊடகப்பேச்சாளர் டி.ஐ.ஜி அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். கடந்த சில நாட்களாக அந்தப் பொலிஸ் உத்தியோகத்தர் கடமையில் இருந்தார் என அவர் தெரிவித்துள்ளார். (வ-இ)

# ஊடகர்கள் மீது தாக்குதல்: முல்லையில் கவனவீர்ப்பு!



முல்லைத்தீவு, ஒக்.20
முல்லைத்தீவு மாவட்டத்தில் ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால் நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் நிமலராஜன் நினைவு தினமான நேற்று அவருக்கு அஞ்சலி நிகழ்வுகளை நடத்திய காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், தமது நிகழ்வுகளின் ஒரு பகுதியாக முல்லைத்தீவு மாவட்டத்தில் அண்மையில் ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து கவனவீர்ப்பிலும் ஈடுபட்டனர். (ம-19,110)

# "கைவிடுங்கள் 20ஆம் திருத்தத்தை" தமிழர் ஆசிரிய சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 20
தற்போது கொண்டுவரப்படுகின்ற இருபதாவது திருத்தம் நாட்டு நிலைமைகளை இன்னும் மோசமாக்கும். ஆகையால் அதைக் கைவிடுமாறு தமிழ் பேசும் கல்விச் சமூகம் சார்பாக வேண்டுகோள் விடுக்கின்றோம் என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கோரியுள்ளது.

இது பற்றி சங்கம் அனுப்பிய செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:
இலங்கையில் இரண்டு மொழிகளைப் பேசுகின்ற மூவின மக்கள் வாழுகின்றனர். காலத்திற்கு காலம் அரசியல் ரீதியாக கொண்டுவரப்படும் சட்டங்களும், திருத்தங்களும் சமூக மட்டத்தில் சவாலுக்கு உட்பட்டு பல்வேறு தரப்பினரையும் பாதிக்கும் வகையில் அமைந்துவிடுகின்றன. இதனாலேயே இந்த நாடு கடந்த காலங்களில் அவலங்களைச் சந்தித்தது. குறுகிய அரசியல் நலனுக்காக கொண்டுவரும் இந்த இருபதாவது திருத்தமானது நீண்டகால அபிலாசைகளுக்கான முற்றுப்புள்ளியாக அமைந்துவிடக்கூடாது.

இந்த நாட்டில் வாழுகின்ற மக்கள் அனைவரும் இலங்கையரென்றால், அனைத்து சமூகங்களாலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசமைப்பு தேவை. அது எல்லோராலும் வரையப்பட்டதாக இருக்க வேண்டும். மக்களுக்கும் இலகுவில் புரியக்கூடியதாக இருக்க வேண்டும். அதனை விடுத்து பெரும்பான்மை எனும் ஆதிக்க நோக்கோடு இதனை இந்த நாட்டிற்காக கொண்டு வருவது பொருத்தமானது அல்ல. - என்றுள்ளது. (து)

## ஊடகவியலாளர்...

### யாழ்ப்பாணம்

யாழ். ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் யாழ். ஊடக அமையத்தில் மதியம் நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்றது. நிமலராஜனின் திருவுருவப் படத்திற்கு அவரது சகோதரன் சுடரேற்றினார். அதைத் தொடர்ந்து யாழ்.மாநகர சபை உறுப்பினர் வ.பார்த்தீபன் மலர்மாலை அணிவித்தார்.

வலி.வடக்கு பிரதேச சபை உறுப்பினர் ச.சஜீவன், ஊடகவியலாளர்கள் மலரஞ்சலி செலுத்தினார்கள்.

போர்ச் சூழலில் யாழில் இருந்து துணிவாக ஊடகப்பணியாற்றியவர் மயில்வாகனம் நிமலராஜன். 2000ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 19ஆம் திகதி யாழ்.மாவட்டத்தில் ஊரடங்கு சட்டம் நடைமுறையில் இருந்த வேளை இவரது வீட்டுக்குள் புகுந்த ஆயுததாரிகள் அவர்மீது துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டனர். அதன்போது அவர் எழுதிக்கொண்டு இருந்த கட்டுரைமீது வீழ்ந்தே உயிர் துறந்தார்.

கொலையாளிகள் துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டு நிமலராஜனை படுகொலைசெய்த பின்னர், வீட்டின் மீது கைக்குண்டுத் தாக்குதலையும் மேற்கொண்டனர்.

அதன்போது வீட்டில் இருந்த நிமலராஜனின் தந்தை சங்கரப்பிள்ளை மயில்வாகனம், தாய் லில்லி மயில்வாகனம் மற்றும் மருமகன் ஜெகதாஸ் பிரசன்னா ஆகியோர் படுகாயமடைந்தனர். இந்தக் கோரத்தாண்டவம் இடம்பெற்று 20 ஆண்டுகள் கடந்த நிலையில் இன்று வரையிலும் நிமலராஜனுக்கு நீதி கிடைக்கவேயில்லை.

### வவுனியா

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் ம.நிமலராஜனின் 20ஆவது நினைவுதினம் வவுனியா தமிழ் ஊடகவியலாளர் சங்கத்தினாலும் நேற்றுக் கடைப்பிடிக்கப்பட்டது.

சங்கத்தின் தலைவர் சு.வரதகுமார் தலைமையில் வவுனியா தமிழ் ஊடகவியலாளர் சங்க அலுவலகத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் அன்னாரது திருவுருவப்படத்திற்கு அஞ்சலிச் சுடரை சிரேஷ்ட ஊடகவியலாளர் பொ.மாணிக்கவாசகம் ஏற்றி மலர் மாலையும் அணிவித்தார்.

ஊடகவியலாளர்கள் மெழுகுதிரி ஏற்றி மலர் தூவி அஞ்சலி செலுத்தியதுடன் நிமலராஜன் தொடர்பான அஞ்சலி உரையினை பொ.மாணிக்கவாசகம் நிகழ்த்தியிருந்தார் நன்றியுரையை ஊடகவியலாளர் ந.கபிலநாத் நிகழ்த்தினார்.

### முல்லைத்தீவு

முல்லைத்தீவில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் உறவினர்களாலும் ஊடகவியலாளர் நிமலராஜனின் நினைவுதினம் கடைப்பிடிக்கப்பட்டது. (ம110,20)


## மரண அறிவித்தல்



தோற்றம்
17 • 03 • 1966

மறைவு
19 • 10 • 2020

**செல்லையா சந்திரகுமார்**
**(உரிமையாளர்- சந்திரன் ஸ்ரோர்ஸ்)**

இந்து மகளீர் கல்லூரி வீதி, கந்தர்மடத்தை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா சந்திரகுமார் நேற்று (19.10.2020) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா-வாலாம்பிகை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற ஆறுப்பிள்ளை-செல்லமுத்து தம்பதியரின் பாசமிகு மருமகனும், பரமேஸ்வரியின் (சுகுணா) அன்புக் கணவரும், கிரிஷாந் (மாணவன், யா/வைத்தீஸ்வரா கல்லூரி), டர்ஷன் (மாணவன், யா/இந்து ஆரம்ப பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், அழகேந்திரன் (கனடா), சுலோஜனா (கனடா), காலஞ்சென்ற சரோஜா மற்றும் ஜெயக்குமார், உதயகுமார் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான இராஜேஸ்வரி, தேவராஜா மற்றும் நாகேஸ்வரி, புவனேஸ்வரி, யோகராஜா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.10.2020) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## மரண அறிவித்தல்



**விஸ்வ பிரம்ம ஸ்ரீ பொன்னையா முத்துக்கிருஷ்ணன்**
**(பிரபல பொறிவலர் Mechanic)**

திருநெல்வேலி காளிகோவிலடியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா முத்துக்கிருஷ்ணன் நேற்று (19.10.2020) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா நாகம்மா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வரும், காலஞ்சென்ற செல்லையா பரிமளத்தின் மருமகனும், திருமகளின் அன்புக் கணவரும், கோமதி, பாலகிருஷ்ணன் ஆகியோரின் சகோதரனும், பரராசசிங்கம், கமலாதேவி, சுப்பிரமணியம், பரமேஸ்வரி, கமலாதேவி, நாகராஜா, சண்முகராஜா, நகுலராஜா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.10.2020) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, மாலை 4.00 மணியளவில் திருநெல்வேலி செம்பாடு இந்து மயானத்தில் தகனக்கிரியைகள் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அரசடி வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

தகவல்:
பொ.பாலகிருஷ்ணன்
த.பரராசசிங்கம்.
T.P: 0777 112 770

## பணியாளர்கள் தேவை (பெண்கள்)

இலங்கையில் உராய்வு நீக்கி எண்ணை (oil) விற்பனையில் முன்னனியாக நிறுவனமாகத்திகழும் கல்ரெக்ஸ் (caltex) நிறுவனத்திற்கு Computer Operator உடன் தேவை. கீழ்குறிப்பிட்ட தகைமைகள் உடையவர்கள் 28.10.2020இற்கு முன் கீழ்குறிப்பிட்ட முகவரிக்கோ அல்லது மின்னஞ்சல் முகவரிக்கோ தங்களது தகவல்களை அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகைமைகள்**


- க.பொ.த சாதாரண மற்றும் உயர்தரசித்தி
- கணினி துறையில் சிறந்த தேர்ச்சி
- யாழ் மாநகரசபை எல்லைக்கு உட்பட்ட பெண்கள்மட்டும்
- ஆங்கில மொழியில் தேர்ச்சி

மின்னஞ்சல் முகவரி:-
Svm.Chevron@gmail.com

Caltex Regional Warehouse
No.158, Stanly Road, Jaffna
**021 222 2100, 077 873 3875**

## விழி வழியும் நீர்த்துளிகள்

**அமரர் கந்தையா இராசரத்தினம்**
(ஓய்வுபெற்ற கணக்காளர், பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், மானிப்பாய்)



மலர்வு 21.12.1945 — உதிர்வு 18.10.2020

அன்புத் தந்தையின் இழப்பால் கலங்கி நிற்கும் யாழ் போதனா வைத்தியசாலை சுகாதார முகாமைத்துவ உதவியாளரான **இராசரத்தினம் தனுசா** அவர்களுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆன்மா அமைதியுற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பணிப்பாளர்,**
**பிரதிப்பணிப்பாளர்கள்,**
**அலுவலக உத்தியோகத்தர்கள்,**
**ஊழியர்கள்.**
**போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.**

## 45ஆம் நாள் நினைவும் நன்றி வழிபாடும்



மலர்வு 18 . 09 . 1957 — உதிர்வு 06 . 09 . 2020

கடந்த 06.09.2020 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்த
**அமரர் மகாலிங்கம் வின்சன் கோமகன்**
(ஓய்வு நிலை கணித ஆசிரிய ஆலோசகர் வடமராட்சி வலய கல்வி அலுவலகம்)
அவர்களின் 45ஆவது நினைவு நாளும், நன்றி வழிபாடும் மதிய போசன நிகழ்வும் இன்று (20.10.2020) செவ்வாய்க்கிழமை கொவிட் 19 சுகாதார வழிமுறைகளை பின்பற்றி, முற்பகல் 11.30 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் என்பதனை அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு அறியத் தருகின்றோம்.

**குடும்பத்தினர்.**
**அல்வாய் வடமேற்கு, அல்வாய்.**
**0770784411**

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 10 . 12 . 1942 — மறைவு 03 . 11 . 2016

அமரர்
**கந்தையா பரமநாதன்**

திதி: சதுர்த்தி (20.10.2020)

நாள்கள் பல நூறு ஓடி மறைந்தாலும் - எம்
நெஞ்சில் நிலைத்திருக்கும் பாசதீபம் - உங்கள்
நினைவுகள் என்றும் அழியாது.
கண்ணின் இமை போல எமைக் காத்த ஐயா -
உங்கள்
கனவுகள் யாவும் நிறைவேறும்.

4/3 முருகமூர்த்தி வீதி,
வண்ணார்பண்ணை
**குடும்பத்தினர்**

## வாடகைக்கு

ஒட்டுமடம், யாழ்ப்பாணத்தில் மூன்று அறைகள், குளியலறையுடன் வீடு (யாழ் இந்துக்கல்லூரிக்கு அண்மையில்) வாடகைக்கு உண்டு.
**0777872907, 0112582431**

## காணி விற்பனைக்கு

கல்வியங்காடு, பருத்தித்துறை வீதியிலிருந்து 1/2 மைல் தூரத்தில் நியூ செம்மணி வீதியில் 3 பரப்பு காணி விற்பனைக்குண்டு.
**077 283 0113**

## காணி விற்பனைக்கு

சொலமன் ஒழுங்கை, பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள 3 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
**076 730 6280**

## தொடர்பு கொள்ளவும்

உள்ளூர் கைவினை பொருட்கள் (பனை, தென்னை) ஈடுபடுவோர்கள் எம்மை தொடர்பு கொள்ளுங்கள். உங்களுக்கான சந்தைப்படுத்தலை நாமே ஏற்படுத்தி தருகிறோம்.
**தொடர்பு: 076 299 9797**

## அதிஷ்டலாப சீட்டிழுப்பு

உடுப்புக்குளம் அலை ஓசை விளையாட்டுக் கழகத்தினால் நிதி சேகரிப்பதற்காக அதிஷ்டலாப சீட்டு விற்பனை இடம்பெற்று வருகிறது.
முன்னர் அறிவிக்கப்பட்டவாறு 30.09.2020 என்ற இறுதி திகதியானது தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்படுகிறது என்பதை அறியத்தருகிறோம்.
குலுக்கல் திகதி 2020.10.25 மாலை 4 மணி

**நிர்வாகம்**
**அலை ஓசை விளையாட்டுக்கழகம்**
**உடுப்புக்குளம்/உப்புமாவெளி**

## YODHA SINGLE CAB விற்பனைக்கு

10,000 கிலோ மீற்றர் மட்டும் தனிப் பாவனை இல் பாவிக்கப்பட்ட FRONT AC உள்ள கொழும்பில் பின்பக்க HOOD அடிக்கப்பட்ட JAPANEESE முன் இரண்டு இருக்கைகள் பொருத்தப்பட்ட TATA வகை YODHA SINGLE CAB உடன் விற்பனைக்கு உண்டு.
**077 749 5956**

*நேற்றும்...*

உள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மினுவாங்கொடை ஆடைத்தொழிற்சாலை கொரோனா கொத்தணிப் பரவலுடன் தொடர்புடையவர்களே தொற்றுக்குள்ளாகியுள்ளனர் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

தனிமைப்படுத்தலில் இருந்தவர்களும், ஆடைத்தொழிற்சாலை ஊழியர்களுடன் தொடர்பில் இருந்தவர்களுமே தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மினுவாங்கொடை ஆடைத்தொழிற்சாலை கொரோனா கொத்தணிப் பரவலுடன் தொடர்புடைய கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 2 ஆயிரத்து 164 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, இலங்கையில் கொரோனா வைரஸின் தாக்கத்தால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 5 ஆயிரத்து 625 ஆக அதிகரித்துள்ளது. அதில் 3 ஆயிரத்து 440 பேர் குணமடைந்துள்ளனர். 2 ஆயிரத்து 172 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். 13 பேர் சிகிச்சைகளின்போது உயிரிழந்துள்ளனர். (எ-22)

*பருத்தித்துறை...*

அவருக்கு மருதங்கேணி பிரதேச வைத்தியசாலையில் அமைக்கப்பட்ட கொவிட்-19 சிகிச்சை நிலையத்தில் சிகிச்சையளிக்க முன்னர் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

ஆனால் சிகிச்சை நிலையம் அமைக்கும் பணிகள் இன்னமும் முடிவுறாததால் அவரை இரணவில சிகிச்சை மையத்துக்கு மாற்ற் முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

புங்குடுதீவைச் சேர்ந்த பெண்ணுக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதை அடுத்து அவர் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் பயணித்த பஸ்களின் சாரதிகள், நடத்துநர்கள் தனிமைப்படுத்தப்பட்டிருந்தனர்.

அந்தப் பெண் பயணித்த கொழும்பு - பருத்தித்துறை இ.போ.ச. பஸ்ஸின் சாரதிக்குக் கொரொணர்த் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது. அதையடுத்தே அவர் இரணவில சிகிச்சை நிலை யத்துக்கு அனுப்பப்பட்டுள்ளார். - (எ-26)

## பணியாளர் தேவை

கிளிநொச்சியில் உள்ள நிறுவனமொன்றுக்கு
1. சமையல்காரர் :- ஆண்கள் மட்டும்
2. காவலாளி :- ஆண்கள் மட்டும்
**077 772 2305**

*யாழ்ப்பாண...*

க.மகேசன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது யாழ்ப்பாணத்தில் தனிமைப்படுத்தலுக்குட்படுத்தப்பட்டோரின் எண்ணிக்கை தற்போது குறைவடைந்துள்ளது. யாழ்ப்பாணத்தில் தற்போது 323 குடும்பங்களைச் சேர்ந்த 595 நபர்கள் மட்டுமே சுயதனிமைப்படுத்தலுக்குட்படுத்தப்பட்டுள்ளனர் புங்குடுதீவு தற்காலிகமாக முடக்கப்பட்டுள்ளதுஅங்குள்ள. சிலரது பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகள் கிடைத்தவுடன் முடக்கம் நீக்கப்படும். மக்கள் அச்சமடையத் தேவையில்லை. என்றார். (எ-111)

## 55ஆவது பிறந்தநாள் நினைவில்

**அமரர் திருமதி**
**கோணேஸ்வரன்**
**சிவகௌரி**



காலம் இன்னும் இருக்கையிலே
காலன் அவன் முந்திவிட்டான்
ஓலம் இடும் பிள்ளைகளுக்கு
ஒளிந்து நீ சென்று விட்டாய்
கோலம் போல் இருந்த வாழ்வு
கொள்ளையிட்டுப் போன பின்னே
ஆல மரமொன்று அடியோடு சாய்ந்ததாய்
ஆடித்தான் போய்விட்டோம் வழியின்றி நாமே

**குடும்பத்தினர்.**
**சிறுப்பிட்டி தெற்கு,**
**நீர்வேலி.**

பிறப்பு 20.10.1976 — இறப்பு 02.04.2020

## 100ஆவது பிறந்த நாளை நினைவு கூருகின்றோம் 20.10.2020




மலர்வு 20 . 10 . 1920 — உதிர்வு 01 . 09 . 1986

அமரர்
**வல்லிபுரம் தம்பிராசா**
(முன்னாள் ஆசிரியர்
யா/மகாஜனாக் கல்லூரி.
யா/வீமன்காமம் மகா வித்தியாலயம்)

**குடும்பத்தினர்.**
**மாவிட்டபுரம்**

# ஓராண்டு ஆகிவிட்டதோ உம் ஒளிமுகம் மறைந்து?



மலர்வு 17 . 04 . 1943

உதிர்வு 31 . 10 . 2019

அமரர்


## கோவிந்தபிள்ளை வீரகத்திப்பிள்ளை

கண்களில் அழுகை ஓயவில்லை - எம்
விழிகள் உங்களை தேடுகையில் .
விழிநீர் ஆறாய் ஓடுதைய்யா
பெற்றவர், உற்றவர் பெருமைகொள்ள
பேரொளியாய் ஒளிர்ந்தீர் - அன்று
உற்றவரை நேசித்து உதவிகள் பல புரிந்து
உயர்வாய் வாழ்ந்தீர்
வாழ்வை வென்று வானுலகம் சென்று விட்டீர்
நித்தமும் எம் நினைவில் நின்று
நிஜத்தில் இறைவனுடன் கலந்துவிட்ட
உங்கள் ஆன்மாசாந்தியடைய எம்
கண்ணீரை மலர்களாய் காணிக்கையாக்கி பிரார்த்திக்கின்றோம்.

நாகர்கோவில் வீதி,
எழுதுமட்டுவாழ் தெற்கு,
எழுதுமட்டுவாழ்.

குடும்பத்தினர்.

# 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 02 . 10 . 1937

மறைவு 09 . 10 . 2013

## அமரர் சின்னத்தம்பி அப்புலிங்கம்

திதி: வெண்பா

அப்பா!
உமை இழந்து ஆண்டுகள் ஏழாகி விட்டன.
ஆசை முகம் மறைந்து அவலம் தான்
சூழ்ந்ததுவோ
உமைக் காக்கப் போராடினோம்.
முடியவில்லை
ஒவ்வோர் பொழுது மிங்கு
உம் நினைவில் வாடுகின்றோம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

# மரண அறிவித்தல்



தோற்றம் 17 . 06 . 1942

மறைவு 19 . 10 . 2020

## இராசையா கனகரத்தினம்

(V.R.K. மில் உரிமையாளர்)

பூநகரி செட்டியகுறுச்சியை பிறப்பிடமாகவும் நல்லூர் சட்டநாதர் சிவன் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா கனகரத்தினம் (V.R.K மில் உரிமையாளர்) நேற்று (19.10.2020) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா மாணிக்கம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வெங்கடாச்சலம் கமலாம்பிகை தம்பதியரின் அன்பு மருமகனும், கௌசலாதேவியின் (மான்) அன்புக் கணவரும், காலஞ்சென்ற தமிழ்ச்செல்வி, கலைச்செல்வி, பரணிதரன், சிறிதரன் (சிங்கப்பூர்) அருட்செல்வி (லண்டன்) கிரிதரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சுகிர்தவதனா, கிரிஷா (சிங்கபூர்) ஜனார்த்தனி, அமிர்தலிங்கம் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், பகீரதன், ரகுராம், ஸ்ரீராம் (சிங்கபூர்), ஸ்ரீவர்த்தன் (சிங்கபூர்) அபிநயா (லண்டன்) அபிஷன் (லண்டன்) அபிஷா (லண்டன்) ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.10.2020) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2.00 மணியளவில் செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சட்டநாதர் சிவன்
கோயிலடி, நல்லூர்.

தகவல்: மனைவி,
பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்
021 221 6179

# மரண அறிவித்தல்



தோற்றம் 29 . 08 . 1957

மறைவு 19 . 10 . 2020

## செல்வராசா மனோன்மணி (மைனா)

காரைநகர் களபூமி சத்திரந்தையைப் பிறப்பிடமாகவும் வவுனியா பண்டாரிகுளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வராசா மனோன்மணி நேற்று (19.10.2020) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்வராசாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கனகசபை (C.T.B) நல்லம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சதாசிவம் நாகம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் இராசலட்சுமி, நாகலிங்கம் (பிரபா களஞ்சியம்) காலஞ்சென்ற இரத்தினசிங்கம் மற்றும் ஞானேஸ்வரி, தனலட்சுமி (கனடா) தர்மகுலசிங்கம் காலஞ்சென்ற அருளையா மற்றும் சுந்தரலிங்கம் (மணிகண்டன்) காலஞ்சென்ற அமுதசிங்கம் மற்றும் பரராசசிங்கம், நகுலேஸ்வரி(லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், உதயரூபன் (குகன் மோட்டோஸ்), யசோதை, மயூரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சுபத்திரா (வவுனியா பொது வைத்தியசாலை), கோபிகா (லண்டன்), விஜயானந் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும், சாகில், அஸ்மிதன், அகானா (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.10.2020) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக தச்சணாங்குளம் இந்து மாயனத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அம்மன்கோவில் வீதி,
பண்டாரிகுளம், வவுனியா.

தகவல்:
குடும்பத்தினர்.
0773634361

*20 இன் கதியை...*

அதன்பின்னர் சபையின் நாளாந்த நடவடிக்கைகள் ஆரம்பாகும். ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழான 3 ஒழுங்கு விதிகள் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும். மறுநாள் 21ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு 20ஆவது திருத்தம் மீதான விவாதம் ஆரம்பாகும். 21, 22ஆம் திகதிகளில் முற்பகல் 10 மணி முதல் இரவு 7.30 மணிவரை விவாதத்தை முன்னெடுக்கப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

22ஆம் திகதி இரவு 7.30 மணிக்கு விவாதம் முடிவடைந்ததும் குழு நிலை ஆரம்பிக்கப்படும். அதன்பின்னர் திருத்தங்கள் முன்வைக்கப்பட்டு 20ஆவது திருத்தம் வாக்கெடுப்புக்கு விடப்படும், சிலவேளை '20' நிறைவேறுவதற்கு இரவு 10 மணி கூடத் தாண்டலாம்.

அதேவேளை, அரசமைப்பின் 20ஆவது திருத்தத்தில் பொதுவாக்கெடுப்புக்கு வழிகோலும் சரத்துகள் இருந்தால் அவற்றை நீக்கிவிட்டு மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலத்துடன் நிறைவேற்றுவதே அரசின் எதிர்ப்பார்ப்பாக உள்ளது.

நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகளில் ஐக்கிய மக்கள் சக்தி, இலங்கை தமிழ் அரசுக்கட்சி, தேசிய மக்கள் சக்தி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி ஆகியன '20'ஐ எதிர்ப்பதற்கு தீர்மானித்து எதிராக வாக்களிக்கவுள்ளன. பொதுஜன பெரமுன, சுதந்திரக் கட்சி, தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி, தேசிய காங்கிரஸ் மற்றும் ஈ.பி.டி.பி. ஆகியன ஆதரவாக வாக்களிக்கவுள்ளன. ஐக்கிய தேசியக்கட்சி மற்றும் எமது மக்கள் சக்தி ஆகிய கட்சிகள் இன்னும் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர்களை நியமிக்கவில்லை.

அதேவேளை, அரசமைப்பின் 20 ஆவது திருத்த வரைபுக்குக் கடும் எதிர்ப்புகள் வலுத்துவரும் நிலையில் அதில் மேலும் சில திருத்தங்களை மேற்கொள்வதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

வாராந்த அமைச்சரவைக் கூட்டம் நேற்று ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது. திருத்த வரைபில் திருத்தங்கள் மேற்கொள்ள அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

20 ஆவது திருத்தச்சட்டவரைவில் சில திருத்தங்களை மேற்கொள்வதற்கு அரசு ஏற்கனவே தீர்மானித்திருந்த நிலையில் மேலும் 3 திருத்தங்களை செய்வதற்கு அமைச்சரவைக் கூட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதேவேளை, இரட்டைக்குடியுரிமை கொண்டவர்கள் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பில் அரசு இன்னமும் தீர்மானம் எடுக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-44,22)

*வவுனியா...*

கிளிநொச்சி மற்றும் வவுனியா மாவட்ட மருத்துவமனைகளிலும் பி.சி.ஆர். பரிசோதனை ஆய்வுகூடங்களை அமைக்க வேண்டும். இதன் ஊடாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடிகளை பாரத்தை ஓரளவாவது குறைக்க முடியும். இவ்வாறு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் வடக்கு மாகாணக் கிளை கோரியுள்ளது.

வடக்கு மாகாணத்தில் சேகரிக்கப்படும் பி.சி.ஆர். மாதிரிகள், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் உள்ள ஆய்வுகூடத்தில் மாத்திரமே சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன. இதனால் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு ஆகக் குறைந்தது இரண்டு நாள்களின் பின்னரே பரிசோதனை முடிவுகள் வெளியிடப்படுகின்றன. இந்தத் தாமதங்களால் கொரோனாத் தொற்று சமூகத்தில் வேகமாகப் பரவுவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் இருப்பதாகச் சுட்டிக்காட்டப்படு கின்றது. இந்த விவகாரம் தொடர்பில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் வடக்கு மாகாணக் கிளையின் தலைவர் மருத்துவர் காண்டீபனிடம் கேட்டபோது,

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை ஊடாக சிறப்பான சேவை வழங்கப்பட்டு வருகின்றது. அவர்களுக்குரிய கொள்ளவை விட கூடுதலான மாதிரிகள் அங்கு அனுப்பப்படுகின்றன. இரவு பகலாக அவர்கள் பரிசோதனைகளை மேற்கொள்கின்றார்கள். அதிகளவான மாதிரிகள் என்பதால் சோதனை முடிவுகளை வெளியிடுவதில் சில தாமதங்கள் நிலவுகின்றன. இதேவேளை வடக்கு மாகாணத்தின் 5 மருத்துவமனைகள் கொரோனா நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்கும் மருத்துவமனைகளாகச் செயற்படவுள்ளன.

கிட்டத்தட்ட 350 நோயாளிகளுக்கு இங்கு வைத்து சிகிச்சையளிக்கப்படவுள்ளன. அவர்களுக்கு குறிப்பிட்ட காலத்துக்கு ஒரு தடவை மாதிரிகள் சேகரிக்கப்பட்டு சோதிக்கப்படவேண்டும். மேலும் தற்போது நாடு முடக்கப்படா ததால், சமூக ரீதியிலான பரிசோதனைகளும் அதிகளவில் மேற்கொள்ளப்படவேண்டும். எனவே அதிகரித்த சோதனைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையால் மாத்திரம் மேற்கொண்டு பெறுபேறுகளை உடனுக்கு உடன் வழங்க கடினமாக இருக்கும்.

எனவே கிளிநொச்சி மற்றும் வவுனியா மருத்துவமனைகளில் ஆய்வுகூடங்களை உடனடியாக அமைப்பதன் ஊடாக இவற்றை ஓரளவேனும் சமாளிக்கக்கூடியதாக இருக்கும், என்றார். (ஒ.5)

*பி.சி.ஆர்..*

தார அமைச்சு மீளவும் வேண்டுகோள் விடுத்தால் சோதனைகளை மீளவும் ஆரம்பிக்க முடியும் என்று மருத்துவபீட வட்டாரங்கள் தெரிவித்தன.

கொரோனா முதலாவது அலையின் போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் மாத்திரமே சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. ஒரு நாளைக்கு சுமார் 75 மாதிரிகள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டு உடனுக்கு உடன் முடிவுகள் வெளியிடப்பட்டன.

தற்போது கொரோனா மூன்றாவது அலை ஆரம்பித்துள்ள போதும் நாடு முடக்கப்படவில்லை. இதனால் சமூக ரீதியில் அதிகளவான மாதிரிகள் பெறப்பட்டு சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன. நாடு முழுவதும் குறிப்பாக வடக்கிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வடக்கில் அதிகளவான மாதிரிகள் பெறப்படுகின்றபோதும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் மாத்திரம் சோதனைகள் மேற்கொள்ளப்படுவதால் முடிவுகள் வெளியிடப்படுவதில் தாமதங்கள் ஏற்படுகின்றன.

பல்கலைக்கழக மருத்துவபீடத்தின் கல்வி நடவடிக்கைகள் மீளவும் ஆரம்பமாகியதாலேயே, கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் சோதனை நடவடிக்கைகள் மருத்துவபீடத்தில் நிறுத்தப்பட்டன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போதுள்ள நிலைமையில் மீளவும் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்வதற்குரிய கோரிக்கைகள் சுகாதார அமைச்சால் முன்வைக்கப்பட்டால், சோதனை நடவடிக்கைகள் மீளவும் ஆரம்பிக்க முடியும் என்று பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ.5)

*அதிகாலை...*

ளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீனுக்குப் பிணை வழங்க கொழும்பு நீதிவான் நீதிமன்றம் மறுத்துள்ளது. அவரை எதிர்வரும் 27ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

தெஹிவளை, எபனேசர் மாவத்தையிலுள்ள மாடிக் குடியிருப்பிலுள்ள வீடொன்றில் ரிஷாத் பதியுதீன் மறைந்திருந்த போது நேற்று அதிகாலை கைதாகினார் என்று பொலிஸ் பொலிஸ் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண 'உதயன்' பத்திரிகையிடம் தெரிவித்தார்.

குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் தலைமையகத்துக்கு அழைத்துவரப்பட்ட அவரிடம் விசாரணை மற்றும் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டு அதன் பின்னர், நேற்று மாலை கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார் என்று பொலிஸ் பேச்சாளர் மேலும் கூறினார்.

கடந்த அரசில் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சராகப் பதவி வகித்த ரிஷாத் பதியுதீன், 2019ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின் போது 222 இ.போ.ச. பஸ்கள் மூலம் இடம்பெயர்ந்த வாக்காளர்களை புத்தளத்திலிருந்து மன்னாருக்கு அழைத்துச் சென்றதன் மூலம் தேர்தல் சட்டங்களை மீறினார் என்றும், அரசுக்குச் சொந்தமான குறித்த அமைச்சின் கீழிருந்த ரூபா 95 இலட்சத்துக்கும் அதிகமான நிதியை முறைகேடாகப் பயன்பத்தினார் என்றும் அவர் மீது குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் அப்போதைய கைத்தொழில் வர்த்தக அமைச்சர் ரிஷாத் பதியுதீன், அப்போதைய மீள்குடியேற்றத் திட்டப் பணிப்பாளர் சம்சுதீன் மொஹமட் யாசீன், மீள்குடியேற்ற திட்ட முன்னாள் கணக்காளர் அழகரத்னம் மனோரஞ்சன் ஆகிய மூன்று பேரையும் கைதுசெய்யுமாறு கடந்த 13ஆம் திகதி சட்டமா அதிபர், பதில் பொலிஸ்மா அதிபருக்கு உத்தரவிட்டார். அவர்களில் சந்தேகநபர்களில் ஒருவரான கணக்காளர் அழகரத்னம் மனோரஞ்சன் கிருலப்பனை பகுதியில் வைத்து கடந்த 14ஆம் திகதி கைதுசெய்யப்பட்டு, எதிர்வரும் 26ஆம் திகதி வரை விளக்கமறியல் வைக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, சட்டத்தை நிலைநாட்டத் தவறிய குற்றச்சாட்டில் ரிஷாத் பதியுதீனுக்குப் பாதுகாப்பு வழங்கிய அவரது பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரும் கைது செய்யப்பட்டார். வெள்ளவத்தை பிரதேசத்தில் வைத்து ரிஷாத் பதியுதீனின் சாரதிகள் இருவர், இரு வாகனங்களுடன் கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

சி.ஐ.டியினரால் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கிணங்க ரிஷாத் பதியுதீன் மற்றும் சம்சுதீன் மொஹமட் யாசீனுக்கு நாட்டை விட்டு வெளியேற நீதிமன்றத்தால் தடை விதிக்கப்பட்டது.

ஆறு பொலிஸ் குழுக்கள் ரிஷாத் பதியுதீனைக் கொழும்பு மற்றும் மன்னாரில் உள்ள அவரது வீடுகளிலும், கிழக்கு மாகாணத்திலும் தேடி வந்தன. அத்துடன் சி.ஐ.டியினர் அவரது மனைவியிடமும் வாக்குமூலம் பதிவு செய்திருந்தனர்.

பின்னர், ரிஷாத் பதியுதீனுடன் இடம்பெற்ற தொலைபேசி உரையாடல் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவிடம் கடந்த வெள்ளிக்கிழமை சி.ஐ.டியினரால் விசாரணை மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமிடமிருந்தும் இது தொடர்பில் சி.ஐ.டியினர் வாக்குமூலமொன்றைப் பதிவு செய்திருந்தனர்.

கடந்த 6 நாள்களாக ரிஷாத் பதியுதீனைத் தேடிவந்த குற்றப் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் நேற்று அதிகாலை அவர் இருக்கும் இடத்தைக் கண்டுபிடித்து அவரைக் கைதுசெய்துள்ளனர்.

இதேவேளை, தான் கைது செய்யப்படுவதைத் தடுக்கும் உத்தரவை வழங்குமாறு, நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன், மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ரிட் மனுவொன்றைத் தாக்கல் செய்தும் இருந்தார். குறித்த மனு இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. (எ-22)

*ரிஷாத்துக்கு...*

செய்யப்பட்ட சந்தர்ப்பத்தில் அவர் தங்கியிருந்த வீட்டின் உரிமையாளரான வைத்தியர் மற்றும் அவரின் மனைவி ஆகியோரும் கைதுசெய்யப்பட்டனர் என்று பொலிஸ் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

வீட்டின் உரிமையாளரான வைத்தியரின் மனைவி ரிஷாத்தின் நெருங்கிய நண்பி என்று விசாரணைகளின்போது தெரிய வந்துள்ளது. அதேவேளை, ரிஷாத் தெஹிவளைக்கு வருவதற்கு முன்னர் தஞ்சம் கோரிய மற்ற இடங்கள் குறித்த விவரங்களைப் பெற விசேட விசாரணைகள் முன்னெடுக் கப்பட்டன. இந்தநிலையில், ரிஷாத்துக்கு அடைக்கலம் கொடுத்த குற்றச்சாட்டில் இதுவரை வைத்தியர் உட்பட 7 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் நேற்று மாலை கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர். ரிஷாத்தைப் போல் அவர்களுக்கும் எதிர்வரும் 27ஆம் திகதி விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது -என்றார். (எ-22)

*வவு.கோரக்...*

இடம்பெற்ற வாள்வெட்டில் காயமடைந்த மூன்றாவது நபரும் சிகிச்சை பயனின்றி நேற்று உயிரிழந்தார்.

கடந்த 17ஆம் திகதி குறித்த பகுதியில் உள்ள வீடொன்றில் இருவர் வெட்டிக் கொலை செய்யப்பட்டனர். ஒருவர் படுகாயமடைந்திருந்த நிலையில் மீட்கப்பட்டு நோயாளர் காவ்வண்டி மூலம் அவர் மூலம் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

அவர் அங்கு சிசிக்சை பெற்றுவந்த நிலையில் நேற்றுச் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார். முல்லைத்தீவு கரிப்பட்டமுறிப்பைச் சேர்ந்த சுப்பிரமணியம் சிவாகரன் என்பவரே உயிரிழந்துள்ளார்.

மாணிக்கர்வளவு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் கோபால் குகதாசன் (வயது40), கரிப்பட்டமுறிப்பைச் சேர்ந்த சிவனு மகேந்திரன் (வயது34) ஆகியோர் வெட்டிக் கொலை செய்யப்பட்டிருந்தனர். அவர்களின் தலைகளில் பெரும் வெட்டுக்காயங்கள் காணப்பட்டிருந்தன.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பாக மாணிக்கர்வளவு கிராமத்தைச் சேர்ந்த ஒருவர் ஓமந்தைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (எ-110)

## மரண அறிவித்தல்

மண்ணில் 24 . 03 . 1959



விண்ணில் 19 . 10 . 2020

### இராசையா கணேசரத்தினம்

ஆவரம்பிட்டி அல்வாய் வடக்கினைப் பிறப்பிடமாகவும், குமுதெணி அல்வாய் வடமத்தி அல்வாயை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா கணேசரத்தினம் நேற்று (19.10. 2020) திங்கட்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் பவளநாயகி (பழம்) அவர்களின் அன்புக் கணவரும், சிவரத்தினம், தேவரத்தினம், சிவனேஸ்வரி, இராஜேஸ்வரி, நகுலேஸ்வரி, ஶ்ரீகாந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், தபேசன், கௌதீபன், சிந்துப்பிருந்தன், சிந்துப்பிரியா, திவாகரன், சிந்துஜன், கஜன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.10.2020) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2 மணியளவில் சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குமுதெணி,
அல்வாய் வடமத்தி, அல்வாய்
0779097786

தகவல் :
குடும்பத்தினர்

## இரண்டாண்டுத் திவசத் தினம்

தோற்றம் 30 . 12 . 1941



மறைவு 12 . 10 . 2018

அமரர்

### திரு கணபதிப்பிள்ளை கனகசுந்தரம்

(முன்னாள் அஞ்சல் ஊழியர்)

திதி ஐப்பசி மாத வளர்பிறைச் சதுர்த்தியில் மறைந்தும் மறையாத எங்கள் குடும்பத்தலைவருக்கு நெஞ்சம் நெகிழ்ந்துருகும் இரங்கலின் அர்ப்பணம்.

என்றும் பிரியமுடன்:
மனைவி பூலோகம்
மகன் கயீபன்
மருமகள் சுயீபா
பேரப்பிள்ளை யஸ்விதா.

தபாலக வீதி,
சாவகச்சேரி.

## மரண அறிவித்தல்

தோற்றம் 13 . 06 . 1980



மறைவு 19 . 10 . 2020

### கந்தையா மீரா

செங்குந்த வீதி திருநெல்வேலி கிழக்கைப் பிறப்பிடமாகவும், 619, யூனிட் 5, வாரிக்குட்டியூரை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா மீரா நேற்று (19.10.2020) திங்கட்கிழமை இறைபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருளம்பலம் முத்தம்மா மற்றும் மகாலிங்கம் பொன்னம்மாவின் அன்புப் பேர்த்தியும், கந்தையா பதுமநாயகியின் அன்பு மகளும், சோபனனின் அன்புத் தாயாரும், பத்மரூபன், பத்மபிரியா, சிறிஜெயராம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஜெகன், நித்தியா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.10.2020) செவ்வாய்க்கிழமை மு.ப 11.00 மணியளவில் செங்குந்த வீதி, திருநெல்வேலி கிழக்கில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

செங்குந்த வீதி,
திருநெல்வேலி கிழக்கு.

தகவல்:
குடும்பத்தினர்.
(077 401 5193)

## மரண அறிவித்தல்



### வேலன் கிருஷ்ணன்

கைதடி கிழக்கு கள்ளிநகரைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வேலன் கிருஷ்ணன் நேற்று (19.10.2020) திங்கட்கிழமை அதிகாலை 4.00 மணியளவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலன் குஞ்சி தம்பதிகளின் பாசமிகு மகனும், கந்தன் சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், சின்னம்மாவின் அன்புக் கணவரும், தயாளினி, குகாந்தினி, லலிதினி காலஞ்சென்ற பிரபானந் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற சதீஸ்வரன், றஞ்சன் (லண்டன்) ஜெயச்சந்திரகுமார் (கொழும்பு), ஆகியோரின் பாசமிகு மாமனாரும், கிளியன், சரஸ்வதி, தவபாலசிங்கம் (கொலண்ட்), வைத்திலிங்கம், பத்மலோயினி ஆகியோரின் அன்புச் சகோதரனும் சிவபாலசிங்கம் (டென்மார்க்), சிவமணி, சரஸ்வதி, காலஞ்சென்ற தவபாலசிங்கம் ஆகியோரின் மைத்துனரும், தமிழின்பன், நவினாஸ், கோபிதா, கோகில்னாஸ், சர்வின், ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று மாலை 4.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக ஊத்தல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கைதடி வடக்கு,
கைதடி.

தகவல்:
குடும்பத்தினர்.


## கலைப்பீட...

பெற்ற மோதல் சம்பவம் மற்றும் தாக்குதல்கள் தொடர்பில் சுயாதீன விசாரணைகளை மேற்கொள்வதற்காக நியமிக்கப்பட்ட தனி நபர் ஆயத்தின் விசாரணை நாளை ஆரம்பமாகவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விசேட பேரவைக் கூட்டத்தில் வைத்து யாழ். பல்கலைக்கழக முன்னாள் வணிக முகாமைத்துவ பீடாதிபதி பேராசிரியர் எம். நடராஜசுந்தரம் விசாரணைகளை மேற்கொள்வதற்கு நியமிக்கப்பட்டிருந்தார்.

பல்கலைக்கழகத்தின் இரண்டாம் மற்றும் மூன்றாம் வருட மாணவர்களுக்கு இடையிலான மோதலை தடுக்கச் சென்ற பல்கலைக்கழக துணைவேந்தர் உள்ளிட்ட பாதுகாப்பு அதிகாரிகளும் தாக்கப்பட்டிருந்தனர். பல்கலைக்கழக நிர்வாகத்தினர் தம்மீது தாக்குதல் நடத்தினர் என மாணவர்கள் குற்றம் சுமத்தியிருந்தனர்.

இந்தத் தாக்குதலில் காயமடைந்ததாகத் தெரிவித்த மாணவன் ஒருவன் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் பல்கலைக்கழக நிர்வாகத்திற்கு எதிராக முறைப்பாடு செய்திருந்தான். வாக்குமூலம் வழங்குவதற்காக நிர்வாகத்தினர் அழைக்கப்பட்டிருந்த நிலையில், முறைப்பாட்டை மாணவன் மீளப் பெற்றிருந்தான். இந்தத் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடையதாக ஆரம்பக்கட்ட விசாரணைகளில் கண்டறியப்பட்ட 21 பேருக்கு வகுப்புத் தடை ஏற்கனவே விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ,5)

## மூன்று...

கிணற்றுக்குள் இருந்து சடலமாக மீட்கப்பட்டனர். சம்பவத்தில் 7, மற்றும் 12 வயதான சிறுவர்களும், 15 வயதான சிறுமியுமே உயிரிழந்துள்ளனர்.

விவசாயத் தேவைக்காகத் தோண்டப்பட்டிருந்த கிணற்றுக்குள் விழுந்தே இவர்கள் உயிரிழந்துள்ளனர்.

நேற்றுக்காலை இந்த மூன்று சிறுவர்களும் காணாமல் போயுள்ளனர். அவர்கள் தேடப்பட்ட நிலையில் கிணற்றுக்குள் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் தவறிக் கிணற்றுக்குள் விழுந்திருக்கலாம் என்றும், ஒருவரை ஒருவர் காப்பாற்ற முயன்றிருக்கலாம் என்றும் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர். (மஇ)


## கண்ணீர் அஞ்சலி

### செல்வராசா மனோன்மணி (மைனா)

அவர்களின்

பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

கனகசபை தர்மகுலசிங்கம்- சகோதரன்
பழமுதிர்ச்சோலை, காரைநகர்.



# சென்னைக்கு மீண்டும் அடி ராஜஸ்தான் அபார வெற்றி

அபுதாபி, ஒக்.20

சென்னைக்கு எதிரான போட்டியில் 7 இலக்குகள் வித்தியாசத்தில் ராஜஸ்தான் அபார வெற்றி பெற்றது.

ஐ.பி.எல். தொடரின் 37ஆவது லீக் ஆட்டம் அபுதாபியில் நேற்று நடைபெற்றது. அதில் சென்னை சூப்பர் கிங்ஸ் மற்றும் ராஜஸ்தான் ரொயல்ஸ் அணிகள் மோதின. இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற சென்னை சூப்பர் கிங்ஸ் அணித் தலைவர் டோனி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார்.

சென்னை அணியின் டுபிளசிஸ் மற்றும் சாம் கர்ரன் தொடக்க வீரர்களாக களமிறங்கினார். 9 பந்துகளை சந்தித்த டு பிளசிஸ் 10 ஓட்டங்களுடன் வெளியேறினார். அடுத்துவந்த வோட்சன் 3 பந்துகளில் 8 ஓட்டங்கள் எடுத்த நிலையில் வெளியேறினார். 25 பந்துகளில் 22 ஓட்டங்கள் எடுத்திருந்த சாம் கர்ரன் ஷ்ரேஷ் கோபால் பந்து வீச்சில் வெளியேறினார். அடுத்த வந்த அம்பதி ராயுடு, அணித்தலைவர் டோனி அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்த முயன்றனர்.

ஆனால், ராஜஸ்தான் அணியின் சிறப்பான பந்துவீச்சால் சென்னை அணி வீரர்களால் எதுவும் செய்ய முடியவில்லை. 19 பந்துகளை சந்தித்த ராயுடு 13 ஓட்டங்களுடனும், 28 பந்துகளை சந்தித்த டோனி 22 ஓட்டங்களுடனும் வெளியேறி ஏமாற்றம் அளித்தனர்.

20 பந்துப்பரிமாற்றங்கள் முடிவில் 5 இலக்குகளை இழந்த சென்னை சூப்பர் கிங்ஸ் அணி 125 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது.

இந்த ஆண்டுக்கான ஐபிஎல் தொடரில் முதலில் துடுப்பெடுத்தாட்டத்தைத் தேர்வு செய்த அணி எடுத்த மிகக் குறைவான ஓட்ட எண்ணிக்கை இதுவாகும்.

126 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ராஜஸ்தான் களமிறங்கியது.



முதலில் முக்கிய இலக்குகளை இழந்த ராஜஸ்தான், பின்னர் நிதானமாக ஆடியது. ஜோஸ் பட்லரும், ஸ்மித்தும் பொறுப்புடன் ஆடி அணியை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் சென்றனர். 17.3 பந்துப்பரிமாற்றத்தில் 3 இலக்குகளை இழந்து 126 ஓட்டங்களை எடுத்து ராஜஸ்தான் அணி வெற்றி பெற்றது. பட்லர் 70 ஓட்டங்களுடனும், ஸ்மித் 26 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது களத்தில் இருந்தனர். (எ)



# சம்பியனானது உதயசூரியன்

கரணவாய், ஒக்.20

அல்வாய் விளையாட்டு விழாவில், 21 வயதுப் பிரிவினருக்கான கிரிக்கெட் போட்டியின் இறுதியாட்டத்தில், உதயசூரியன் அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது. மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகம் நடத்திய அல்வாய் விளையாட்டு விழாவில் 21 வயதுப் பிரிவினருக்கான இறுதியாட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை மைக்கல் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றது.

இதில் அல்வாய் யூத் அணியை எதிர்த்து, குரும்பகட்டி உதயசூரியன் அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய உதயசூரியன் அணி நிர்ணயிக்கப்பட்ட 10 பந்துப் பரிமாற்றங்களில் 3 இலக்குகளை இழந்து 80 ஓட்டங்களைப் பெற்றது. அந்த அணி சார்பில் அதிகபட்சமாக புருஷோத் 27 ஓட்டங்களையும், நிதுஷன் 17 ஓட்டங்களையும், திசான் 15 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். பந்து வீச்சில் அல்வாய் யூத் அணி சார்பில் நிசான், பவித்திரன் ஆகியோர் தலா ஒவ்வொரு இலக்குகளைக் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யூத் அணி இறுதிவரை போராடி 7 இலக்குகளை இழந்து 79 ஓட்டங்களைப் பெற்று ஒரு ஓட்டத்தால் தோல்வியடைந்தது. அந்த அணி சார்பில் கிரிதரன் 35 ஓட்டங்களையும், நிகாஷன் 17 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் புருஷோத் 3 இலக்குகளையும், திசான், செந்தூரன், லிதுஷன் ஆகியோர் தலா ஒவ்வொரு இலக்குகளையும் கைப்பற்றினர்.

ஆட்ட நாயகனாக உதயசூரியன் அணி வீரர் புருஷோத் தெரிவுசெய்யப்பட்டார். (ற-422)

# ஜப்பான் வீராங்கனை சம்பியன்

டென்மார்க், ஒக்.20



டென்மார்க் பகிரங்க சர்வதேச பூப்பந்துப் போட்டியில் பெண்களுக்கான ஒற்றையர் இறுதி ஆட்டத்தில் நஜோமி ஒகுஹறா சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டார்.

டென்மார்க் பகிரங்க சர்வதேச பூப்பந்துப் போட்டி அங்குள்ள ஓடென்ஸ் நகரில் நடைபெற்றது.

இதில் நேற்றுமுன்தினம் நடந்த பெண்கள் ஒற்றையர் இறுதி ஆட்டத்தில் முன்னாள் உலக சம்பியனான நஜோமி ஒகுஹறா (ஜப்பான்) 21:19, 21:17 என்ற நேர் செற் கணக்கில் ஒலிம்பிக் சம்பியன் கரோலினா மரினை (ஸ்பெயின்) தோற்கடித்து சம்பியன் பட்டத்தைத் தட்டிச் சென்றார்.

ஒகுஹறா 2 ஆண்டுகளுக்குப் பின்னர் வென்ற முதல் பட்டம் இதுவாகும். ஆண்கள் பிரிவில் சக நாட்டவரான ரஸ்மஸ் ஜெம்கேவை வீழ்த்தி டென்மார்க்கின் ஆன்டோன்சென் மகுடம் சூடினார். (ற)

# வட்டக்கண்டல் சுடரொளி கழக இளைஞர்களுக்கு பாதணிகள்

மன்னார், ஒக்.20

மன்னார் மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வட்டக்கண்டல் சுடரொளி விளையாட்டுக் கழக இளைஞர்களுக்கு, ஒரு தொகுதி கால்பந்தாட்ட பாதணிகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை வழங்கப்பட்டன.

வட்டக்கண்டல் சுடரொளி விளையாட்டுக் கழக இளைஞர்களுக்கு, முன்னாள் சுடரொளி விளையாட்டுக் கழக வீரரும், வடக்கு மாகாண கட்டட நிர்மாண சங்கத்தின் பணிப்பாளர்களில் ஒருவருமான டக்சன் ஒரு தொகை கால்பந்தாட்ட பாதணிகளை வழங்கினார். மன்னார் மாவட்டத்திலுள்ள கால்பந்தாட்ட வீரர்களின் விளையாட்டுத் திறனை ஊக்கப்படுத்தும் வகையில், பல்வேறு உதவித்திட்டங்களை தொடர்ந்தும் அவர் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ற-56)

English Classes.
Gr 1 to O/L
Grammar with syllabus
வீடு வந்து கற்பிக்கப்படும்.
077 331 4608

காணி வாடகைக்கு தேவை
யாழ் நகருக்கு அண்மைப்பகுதியில் (3 km இற்குள்) வெற்றுக்காணி அல்லது வீட்டுடன் இணைந்த காணி வாடகைக்கு தேவை.
தொடர்பு:076 829 4100

தென்னங்காணி தேவை
(பளை, இயக்கச்சி, முகமாலை பகுதிகளில்)
தென்னந்தோட்டம் அல்லது தென்னஞ் செய்கைக்குரிய காணி பளை, இயக்கச்சி, முகமாலை பகுதிகளில் விற்க உள்ளவர்கள் நேரடியாக தொடர்பு கொள்ளவும்.(15 - 25 ஏக்கர்) தரகர்கள் தேவையில்லை.
076 623 4871



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 20.10.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.